நகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்


# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 13 வள்ளுவர் ஆண்டு2029 ஆனி 5 வெள்ளிக்கிழமை (19-06-1998) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:174


# புலிகள்-படையினர் 2 இடங்களில் மோதல்

## விமானங்கள் தாக்குதல்

கொழும்பு, ஜூன் 19

'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கைத் துருப்பினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மாங்குளத்தின் வட கிழக்குப் பகுதியிலும், ஒலுமடுப் பகுதியிலும் நேற்று முன்தினம் பெரும் மோதல்கள் இடம்பெற்றதாகப் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது.

இந்த மோதல்களில் விடுதலைப் புலிகள் தரப்பில் ஐவர் உயிரிழந்ததாகவும்—

பலர் காயமடைந்ததாகவும் — மேலும் தெரிவிக்கப்பட்டது.

ஒலுமடுப் பகுதியில் புலிகளின் பாதுகாப்பு நிலைகள் மீது விமானக் குண்டு வீச்சு இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(இ-3-7-21)

## ஆனைக்கோட்டை சம்பவம் குறித்து அறிவிப்பு

கொழும்பு, ஜூன் 19

ஆனைக்கோட்டைப் பதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதல் சம்பவம் குறித்துபாதுகாப்பு அமைச்சு நேற்று அறிவித்தது.

கொக்குவில் ஆனைக்கோட்டைப் பகுதியில் படையினர் தேடுதல் நடத்தினர் எனவும் —

அப்போது அப்பகுதியில் திடீர் மோதல் ஒன்று இடம்பெற்றதாகவும் —

(10 ஆம் பக்கம் பார்க்க)

# 4 அதிகாரிகள் உட்பட 39 படையினர் கடந்த 8 நாள் சண்டையில் பலி!

## இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 19

'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கையில் கடந்த 11 ஆம் திகதி முதல் நேற்று வரை 4 அதிகாரிகள் உட்பட 39 படையினர் உயிரிழந்தனர் என்று இராணுவப்பேச்சாளர் பிரிகேடியர் சரத்முனசிங்க தெரிவித்தார்.

நேற்று கொழும்பில் நடந்த வாராந்த செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இக்காலத்தில் இரு அதிகாரிகள் உட்பட 75 படையினர் காயமடைந்தனர் என்றும் —

விடுதலப்புலிகள் தரப்பில் 59 பேர் உயிரிழந்துள்ளனர் என்று புலிகள் அறிவித்துள்ள போதிலும் 200 க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர் என்றும் — அவர் தெரிவித்தார்.

(இ-3-7-21)

# வடக்கு - கிழக்கு மாகாணத் தேர்தல் நடத்த பாதுகாப்புப் பிரிவு அனுமதி

கொழும்பு, ஜூன் 19

வடக்கு—கிழக்கு மாகாண சபைக்குத் தேர்தல் நடத்த பாதுகாப்புப் பிரிவு அனுமதி வழங்கிவிட்டது என்றுபொது மக்கள் ஐக்கிய முன்னணிச் செயலரும், அமைச்சருமான டி. எம். ஜயரத்தின தெரிவித்துள்ளார்.

வடக்கு - கிழக்கு மாகாண சபையில் இடம்பெறும் நிர்வாகச் சீர்கேடுகளை நீக்க அங்கு தேர்தலை நடத்த வேண்டும் என்றும் —

இல்லையேல் இடைக்கால நிர்வாக சபை ஒன்றை அமைக்க வேண்டும் என்றும் — தமிழ்க் கட்சிகள் கோரியிருந்தன.

இந்தச் சபைக்கான தேர்தலை நடத்த அரச மட்டத்தில் ஆராயப்பட்டு, பாதுகாப்புப் பிரிவிடம் ஆலோசனை கோரப்பட்டிருந்தது.

பாதுகாப்புப் பிரிவு அனுமதி வழங்கியுள்ளதால் விரைவில் தேர்தல் நடக்கக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

(இ-1-3)

# "சண்டேலீடர்" ஆசிரியரின் வீடு மீது வெள்ளைவானில் வந்தோர் தாக்கு!

## வேட்டினால் மோட்டார் சைக்கிள் சேதம்

கொழும்பு, ஜூன் 19

"சண்டே லீடர்" ஆங்கில வார இதழின் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவின் நுகேகொடையில் உள்ள வீடு நேற்றுமுன்தினம் இரவு 11.30 மணியளவில் வெள்ளை வானில் வந்த இனந்தெரியாத குழு ஒன்றினால் தாக்கப்பட்டுள்ளது.

ரி. 56 ரகத் துப்பாக்கிகளால் வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

இதனால் அங்கிருந்த இரு மோட்டார் சைக்கிள்கள் சேதமடைந்தன.

தாக்குதல் நடந்த சமயம் லசந்தவிக்கிரமதுங்க வீட்டில் இருக்கவில்லை. அவரது மனைவி, மகள் ஆகியோர் வீட்டில் இருந்தனர்.

அந்தக் குழுவினர் சென்ற பின்பே அவர் வீட்டுக்கு வந்தார்.

விசாரணை மேற்கொண்ட பொலீஸார் அங்கிருந்து 20 வெற்று ரவைகளைக் கைப்பற்றினர்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் மாநாடு நேற்று நடைபெற்ற போது இத் தாக்குதல் சம்பவம் குறித்து பிரஸ்தாபிக்கப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பான விசாரணையை சி.ஐ.டியினரிடம் ஒப்படைப்பதாக அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார். (இ-1-3-21)

# அமைச்சரின் வவுனியா விஜயம் திடீர் ரத்து!

## பாதுகாப்பு காரணமாம்

வவுனியா, ஜூன் 19

வவுனியா வைத்தியசாலை நிர்வாகக் கட்டடத்தை நேற்று திறந்து வைக்க வருகை தரவிருந்த சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா பாதுகாப்புக் காரணங்களுக்காக இறுதி நேரத்தில் விஜயத்தை ரத்துச் செய்தார்.

அமைச்சரின் வருகைக்காக வவுனியா நகரில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்த போதும் காலை 11.30 மணியளவில் அமைச்சர் விஜயத்தை ரத்துச் செய்துள்ளதாக அறிவித்ததையடுத்து, புளொட் அமைப்பின் தலைவர் த. சித்தார்த்தன் வைத்தியசாலைக் கட்டடத்தை திறந்து வைத்தார்.

(இ-164-3)

# யுத்தச்செய்தி தடை நீக்க செய்தியாளர் வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 19

யுத்தச் செய்திகள் மீது விதிக்கப்பட்டுள்ள தடை முற்றாக நீக்கப்பட வேண்டும் என நேற்று செய்தியாளர்கள் வலியுறுத்தினர்.

அமைச்சரவை கூட்டத்தை அடுத்து நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அமைச்சரவை பேச்சாளரான தபால்தந்தி தொலைத்தொடர்பு தகவல்துறை அமைச்சர் மங்கள சமரவீரவிடம் இக்கோரிக்கை விடுக்கப்பட்டது.

யுத்தச் செய்தி தடை விடயம் பாதுகாப்பு அமைச்சுடன் தொடர்புடையது மேற்படி அமைச்சுடன் பேசித்தான் தீர்மானமொன்றுக்கு வர வேண்டும் என அமைச்சர் மங்கள சமரவீர பதில் அளித்தார்.

(இ-21)

# இந்து குருமார்களை ஜனாதிபதி சந்திப்பார்

கொழும்பு, ஜூன் 19

பாதுகாப்புப் படையினரால் இந்துக் குருமாருக்கு ஏற்படுகின்ற அசௌகரியங்கள் தொடர்பாக இந்து குருமார்களுக்கும், ஜனாதிபதிக்கும் இடையில் எதிர்வரும் 23 ஆம் திகதி காலை 11 மணிக்கு அலரிமாளிகையில் சந்திப்பு இடம்பெறவிருக்கிறது.

இந்துக் குருமாருக்கும், ஜனாதிபதிக்கும் இடையில் நேற்று முன்தினம் சந்திப்பு இடம்பெற ஏற்பாடாகியிருந்ததும்—

அச் சந்திப்பில் ஜனாதிபதி பங்குபற்றாததால் இந்து குருமார் ஏமாற்றத்துடன் திரும்பியதும்—தெரிந்ததே.

(இ-1;3)

# குண்டுத் தகவலை அடுத்து கருணாநிதி அலுவலகம் பொலீஸாரால் சோதனை

சென்னை, ஜூன் 19

தமிழக முதலமைச்சர் மு. கருணாநிதியின் சென்னையில் உள்ள தலைமைக் காரியாலயம் நேற்று பொலீஸாரால் தீவிர சோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

முதலமைச்சரின் அலுவலகத்தில் வெடி குண்டு வைக்கப்பட்டிருப்பதாக தமிழக காவல்துறையைச் சேர்ந்த உயர் அதிகாரி ஒருவருக்குக் கிடைத்த மர்மத் தொலைபேசி அழைப்பை அடுத்து இத்தீவிர தேடுதல் நடத்தப்பட்டது.

முதலமைச்சரின் அறை உட்பட ஏனைய பகுதிகளும் பொலிஸாரினால் தீவிர பரிசோதனைக்குட்படுத்தப்பட்டதாகவும் —

மோப்ப நாய்களும் பரிசோதனை நடவடிக்கையில் பயன்படுத்தப்பட்டதாகவும் —

ஆனால் குண்டு எதுவும் கண்டு பிடிக்கப்படவில்லை என்றும் — தமிழக காவல்துறையினர் அறிவித்தனர். (இ-7)

# இறுதிநிலை விளையாட்டு போட்டிகள் ஒத்திவைப்பு

எதிர்வரும் 25 ஆம் திகதி திருகோணமலையில் ஆரம்பமாகவிருந்த வடக்கு-கிழக்கு மாகாணமட்ட இறுதி நிலை விளையாட்டுப் போட்டிகள் செப்ரெம்பர் மாதத்துக்குப் பிற்போடப்பட்டுள்ளன என்று மாகாணக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளதாக யாழ். வலயம் ஒன்றின் கல்விப்பணிப்பாளர் நா. சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த வீரர்கள் இப்போட்டியில் கலந்துகொள்ளப் போக்குவரத்து வசதி செய்ய முடியாது என்று மாகாண சபை தெரிவித்ததைத் தொடர்ந்து போட்டிகளைப் பிற்போடுமாறு பல அமைப்புகள் கோரிக்கை விடுத்திருந்தன.

(இ-3)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனலையம்பதி – புளியந்தீவு

அருள் மிகு

## ஸ்ரீ நாகேஸ்வரன் தேவஸ்தானம்

## மகா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

★ **கும்பாபிஷேக கிரியாரம்பம்:**
**22 – 06 – 98** திங்கட்கிழமை மு. ப. 11. 30 மணி முதல்

★ **தைலாப்பியங்கம் (பக்தர்கள் எண்ணெய்க் காப்புச் சாத்துதல்)**
**25– 06– 98** வியாழக்கிழமை காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரை

★ **மகா கும்பாபிஷேகம்:**
**26– 06– 98** வெள்ளிக்கிழமை அதிகாலை 5. 57 மணி முதல் 6. 40 மணி வரை வரும் சுபமுகூர்த்தத்தில் நடைபெறும்.

பிரதிஷ்டா பிரதம குரு
சிவாச்சாரிய திலகம், சிவபூஜாநிதி
சிவஸ்ரீ. பால. பஞ்சாட்சர சிவாச்சாரியார்
(ஊரெழு)

ஷ பரிபாலன சபையினர்.

(56969)


# மரண அறிவித்தல்கள்

## சுப்பிரமணியம் குமாரசாமி

(முன்னாள் யாழ்ப்பாண வர்த்தகர்)

புங்குடுதீவு 7 ஆம் வட்டாரத்தை (ஊரதீவு) பிறப்பிடமாகவும், தற்பொழுது கனடாவை வதிவிடமாகக் கொண்டவரும் யாழ்ப்பாண பிரபல வர்த்தகரும் சமூகத் தொண்டரும் அறப்பணியாளருமான சுப்பிரமணியம் குமாரசாமி 17 - 6 - 98 இல் கனடாவில் சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் இளையபிள்ளையின் அன்பு மகனும், காலஞ்சென்ற திரு. திருமதி முருகேசு அவர்களின் பாசமிகு மருமகனும், சின்னப்பிள்ளையின் (கனடா) அன்புக் கணவரும், சிவலிங்கம் (வர்த்தகர், வெள்ளவத்தை குறோசறி, கொழும்பு), சண்முகலிங்கம் (அதிபர், யா / புங்குடுதீவு ஸ்ரீகணேச மகா வித்தியாலயம்), திருமதி ச. பங்கையற்செல்வி (ஆசிரியை, வவுனியா), யோகலிங்கம் (ஆசிரியர், கனடா), திருமதி அ. கோகுலபூபதி (கனடா), துரைராசசிங்கம் (களஞ்சியப் பொறுப்பாளர், கனடா), திருமதி சு. ரேணுகா (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், வசந்தகுமாரி (வவுனியா), சந்திரகலா (யாழ்ப்பாணம்), சதாசிவம் (ஆசிரியர், கனடா), செல்வமலர்(ஆசிரியை, கனடா), அமிர்தலிங்கம் (எழுதுவினைஞர், கனடா), சாந்தகலா (கனடா), சுபேந்திரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், சுரேஸ்குமார், சுதா (லயணி), குகப்பிரியா, றஜிதா, குருபரன், கிருசிகா, யசிகா, தாரணி, கோபிநாத் (கனடா), விபிதா, விதுதா (கனடா), சசிலா (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனாரும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை, புவனேஸ்வரி விசாலாட்சி ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்றவர்களான விசாலாட்சி, பொன்னம்பலம், நாகநாதபிள்ளை மற்றும் கார்த்திகேசு (லண்டன்), காலஞ்சென்ற விசுவலிங்கம், பாக்கியம், கந்தையா (யாழ்ப்பாணம்), குமாரசாமி, இரத்தினம் (மன்னார்), தருமலிங்கம் பரிமளம்(கொழும்பு), ஆறுமுகம் (வர்த்தகர் யாழ்ப்பாணம்), பாக்கியநாதன் கோமளம் (யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 21-6-98 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் மொன்றியோ நகரில் நடைபெறும்.

துக்க நிகழ்வுகள் 132/3, பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்தில் எஸ். கே. சண்முகலிங்கம் (அதிபர்) அவர்கள் இல்லத்திலும், வவுனியா இறம்பைக்குளம் அலகரஒழுங்கையில் உள்ள சு. கு. சிவலிங்கம் அவர்களது இல்லத்திலும் நடைபெறும்.

இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
எஸ். கே. சண்முகலிங்கம்
(மகன்)
(அதிபர் யா / புங்குடுதீவு ஸ்ரீகணேச மகா வித்தியாலயம்)

132/3, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
(56964)

## பொன்னர் கந்தையா

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும், கொழும்பு வெள்ளவத்தை காலி றோட் இல.55 ஐ வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னர் கந்தையா 16-06-98 இல் காலமானர்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை சனிக்கிழமை (20-6-89) கல்கிசை இந்து மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பொ. சிதம்பரப்பிள்ளை
(அண்ணன்)

'மதிபவனம்',
தாமோதரம்பிள்ளை வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி.
(சி/4064)

## கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 19

வலி. கிழக்கு வடபகுதி பலநோ. கூ. சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர் வரும் ஜூலை மாதம் 9 ஆம் திகதி காலை 10-30 மணிக்கு சங்கத் தலைமைப் பணிமனையில் நடைபெறவுள்ளது. (ஐ-ரீ)


CHEMISTRY
A/L 2000
Sat., Sun, - 4.00 p. m.
A/L 98 Paper Class
ஆரம்பம்: 20/6 Sat. 5 p.m.
Mr. மகேஸ்வரன் B.Sc.

A/L 2000 புதிய பிரிவு
Drama Mr. ஜோண்சன்
Logic Mr. மகிந்தன்
**SHAMROCK**
(சி/4063)

**நாகம்ஸ் சினிமா**
சுன்னாகம்.
அகல வெண் திரையில்
18 - 06 - 98 வியாழன்
கார்த்திக் (இரு வேடம்)
சுவாதி, வடிவேலு
நடித்த
**சுந்தரபாண்டியன்**
(புதிய வெளியீடு)
காட்சிகள்:- 10-30, 2-30
(56967)

**ராஜா டாக்கீஸ்**
யாழ்ப்பாணம்.
2 ஆவது வெற்றிவாரமாக
ரஜனி - நக்மா
ரகுவரன், ஜனகராஜ்
நடித்த
**பாட்ஷா**
தினசரி
10-30 — 2-00, 5-00
(புதிய நேரம்)
(சி/3917)

**லிபேட்டி தியேட்டர்**
அச்சுவேலி.
இன்று மட்டும்
கார்த்திக்
( இரு வேடங்களில் )
ஹீரா, சுவாதி
வடிவேலு நடித்த
**சுந்தரபாண்டியன்**
( குடும்பச் சித்திரம் )
புதிய வெளியீடு
சனி முதல்
காதல் மன்னன்
ஜெமினிகணேசன்
சரோஜாதேவி நடித்த
**கல்யாணப் பரிசு**
நேரம்:- 10-30, 2-30
(பழைய நேரம்)
Tele. No. 070 - 212223
(56651)

**ஸ்ரீசெல்வா சினிமா**
ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.
தினசரி:- 10-00, 2-00 மணி
( பழைய நேரம் )
19-06-98 —21-06-98 வரை
M.G.R. - ஜெயலலிதா
நடித்த
**ஆயிரத்தில் ஒருவன்**
( CD வெளியீடு )
22 முதல் 24 வரை
அஜித்-சிம்ரான் நடித்த
**அவள் வருவாளா**
( CD வெளியீடு )
(56974)


# LIONS CLUBS INTERNATIONAL

District 306 B,
Sri Lanka

## English Oratorical Contest

At Jaffna Hindu Ladies College,
on 24 – 06 – 1998 at 3.00 p m

For

The Lion Raymond Muthiah Memorial
GOLD MEDAL

Organised by:

The District Chairman for Leos,
Lions Clubs International,
District 306 B, Sri Lanka.

RUIIES FOR THE COMPETITION:

1. A maximum of three contestants can participate from each School, non- Leo members may participate but the number should not exceed THREE.
2. A previous winnerr of the above award is debarred from participation.
3. A passage selected by the Organisers will be available to the competitors, which they have to memorise and deliver on the day of the Contest. The verdict of tbe Judges will be final.
4. Applications should reach, Lion B. Thavapalan, District Chairman, 82/5, Nallur Cross Road, Nallur on or befor 23-06-98 Thuesday and the Applicants should report at Jaffna Hindu Ladies College before 3.00p.m on 24-06-98 without any further in tumation.

Lion B. Thavapalan
District Chairman Leos,
Lions Clubs International,
District 306 B, Sri Lanka.

(C/4059)

# சர்வதேச லயன்ஸ் கழகம்

## மாவட்டம் 306 பி ஸ்ரீலங்கா

ஜூன் 27 ஆம் திகதி லியோக்களின் எழுச்சி விழாவாக கொண்டாடப்படவுள்ள

## 'லியோ கருத்தரங்கு'

நிகழ்வையொட்டி
மாவட்ட லியோ தலைவரால்
ஒழுங்கு செய்யப்பட்டுள்ள

## லயன் றேமன்முத்தையா ஞாபகார்த்த

தமிழ் பேச்சுப் போட்டி

பரிசில் **தங்கப்பதக்கம்**
வழங்கப்படவுள்ளது

### போட்டி நிபந்தனைகள்

1. பிராந்தியம் 8 இன் லியோ கழக உறுப்பினர்கள் மட்டும் பங்குபற்றலாம்.
2. கடந்தகாலங்களில் நடைபெற்றஇவ்ஞாபகார்த்த போட்டிகளில் பரிசு பெற்றவர்கள் பங்குபற்ற முடியாது.
3. ஒரு லியோ கழகத்தில் இருந்து 3 பேர் மட்டும் பங்குபற்றலாம்.
4. போட்டியில் பேசுபவர்களுக்கு ஆகக் கூடியது 8 நிமிடங்கள் வழங்கப்படும்.
5. போட்டிக்கான விண்ணப்ப முடிவு திகதி 23-06-98 செவ்வாய் ஆகும்.
6. போட்டி நடைபெறும் இடம்:
   யாழ். இந்துக் கல்லூரி.
   காலம்: 25 — 06 — 98 வியாழன்
   நேரம்: பிற்பகல் 3. 00 மணி (புதிய நேரம்)

பேச்சுப்போட்டிக்கான தலைப்பு:

பின்வரும் தலைப்புகளில் போட்டியாளர் ஏதாவது ஒன்றை தெரிவு செய்யலாம்.

★ 21 ஆம் நூற்றாண்டில் இளைஞர்கள்
★ மாறி வரும் உலகில் விஞ்ஞானிகளின் பங்கு.
★ அறிவியல் அருளியலுக்கு முரணானதா.
★ சேவையே வாழ்வின் குறிக்கோள்.

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி;

**மாவட்ட லியோ தலைவர்**
இல. 82/5, நல்லூர் குறுக்கு வீதி,
நல்லூர்.

**லயன் பா. தவபாலன்**
மாவட்ட லியோ தலைவர்,
சர்வதேச லயன்ஸ், கழகம்
மாவட்டம் 306 பி ஸ்ரீலங்கா.

(சி/4061)

## நாளை (20-06-1998) சுழிபுரம் - பறாளாய்

## ஈசுர விநாயகரின் கொடியேற்றத் திருவிழா

(56968) சோழியூரான் – பிறைசூடிக்குரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரஷ்ய யூரோ மலைப்பிராந்தியத்தில்

# ஆயுதக் கிடங்கை மின்னல் தாக்கி குண்டுகள் வெடிப்பு! காடுகளில் தீ!!

மொஸ்கோ, ஜூன் 19

ரஷ்யாவின் யூரோ மலைப் பிராந்தியத்தில் ஆயுதக் கிடங்கு ஒன்றை மின்னல் தாக்கியது. இதனால் தொடராகப் பல குண்டு வெடிப்புக்கள் ஏற்பட்டன.

இச்சம்பவத்தில் ரஷ்ய படை வீரர்கள் 6 பேர் உயிரிழந்தனர்; 14 பேர் காயமடைந்தனர்.

குண்டு வெடிப்பினால் ஏற்பட்ட பெரும் தீ அருகே உள்ள காட்டுப்பகுதிகளில் பரவியது. இதனால் 150 ஹெக்டேயர் வனப்பிரதேசத்தில காட்டுத்தீ மூண்டது. தீயணைப்புப் படையினர் பல மணி நேரம் போராடி தீயைக் கட்டுப்பாட்டினுள் கொண்டு வந்ததாக அறிவிக்கப்பட்டது.

காட்டுத்தீ பரவியதால் பீதியுற்ற மக்கள் சுமார் 3 ஆயிரம் கிராமங்களில் இருந்து அவசர அவசரமாக வெளியேறியுள்ளனர்.

(ஐ)



யூகோஸ்லாவியாவின் கொசொவோ மாகாணத்தில் இருந்து உயிர் தப்பி மொண்டிநிக்ரோவுக்கு வந்து சேர்ந்த அல்பேனிய இனத்தாயும் இரு சிறுவர்களும்.

சேர்பியர்கள் நடத்திவரும் தாக்குதல்களினால் ஆயிரக் கணக்கான அல்பேனிய இனத்தவர்கள் கொசொவோவிலிருந்து அகதிகளாக வெளியேறி அல்பேனியாவின் வடபகுதியில் தஞ்சமடைந்துள்ளனர். (ஐ)

## உலக அரங்கில்

# யென் நாணய வீழ்ச்சியைத் தடுக்க அமெரிக்கா டொலர்களை விற்றது!

### கிளின்ரன் நிர்வாகம் திடீர் நடவடிக்கை

ரோக்கியோ, ஜூன் 19

ஐப்பானின் யென் நாணயம் மேலும் வீழ்ச்சியடைவதைத் தடுப்பதற்காக அமெரிக்கா தனது டொலரை விற்று யென்னை வாங்கியிருக்கிறது.

வெளிநாட்டு நாணயம் ஒன்றுக்கு ஆதரவாக கிளின்ரன் நிர்வாகம் டொலரை விற்பனை செய்தது இதுவே முதன்முறை என்று தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்க மத்திய வங்கியும், ஜப்பான் மத்திய வங்கியும் கூட்டாக இந் நடவடிக்கையை மேற்கொண்டன.

அமெரிக்காவின் இந்தத் தலையீட்டினால் யென் நாணயத்தின் பெறுமதியில் உடனடியாக மாற்றம் ஏற்பட்டது.

இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை ஊக்குவிக்கும் முயற்சியாக அமெரிக்கா எவரும் எதிர்பார்த்திராத இந் நடவடிக்கையை எடுத்துள்ளது.

ஒரு டொலருக்கு 147 யென் என வீழ்ச்சி கண்டிருந்த யென் நாணயம் அமெரிக்கத் தலையீட்டின் பின் உடனடியாக ஒரு டொலருக்கு 137 யென் என்ற அளவுக்கு உயர்ந்தது.

ஜப்பானியப் பொருளாதாரம் அண்மைக் காலத்தில் ஏற்படாதவாறு வெகுவாக வீழ்ச்சி கண்டு வருகிறது. (ஐ)

## இத்தாலி கெமரூனை வென்றது!

பாரிஸ், ஜூன் 19

பிரான்ஸில் நடைபெறும் 16ஆவது உலகக் கிண்ண உதைபந்தாட்டத் தொடரில் நேற்று முன் தினம் நடைபெற்ற ஆட்டங்களில் முதலாவது ஆட்டத்தில் இத்தாலி—கெமரூன் அணியை 3-0 என்ற கோல் கணக்கில் வென்று வாகை சூடியது.

இரண்டாவது ஆட்டத்தில் சிலி – ஆஸ்திரிய அணிகளுக்கிடையிலான போட்டி 1-1 என்ற கோல் கணக்கில் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. இந்த ஆட்டம் மிகவும் விறுவிறுப்பாக இருந்தது. ஆட்டத்தின் இறுதி நேரத்திலேயே ஆஸ்திரிய அணி கோல் போட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ-ரீ)



மரியா டி சொய்ஸா என்ற 65 வயதான பிறேசில் மாது.

உலகக்கிண்ணப்போட்டியின் முதல் நாள் ஆட்டத்தில் பிறேசிலின் நம்பிக்கை நட்சத்திரம்ரோனால்டோ முதலாவது கோலைப் போட்ட காட்சியைக் கண்டு ஆனந்தக் கண்ணீர் வடிக்கிறார்.

இந்த ஆட்டத்தில் மொரோக்கோ அணியை 3–0 என்ற எண்ணிக்கையில் பிறேசில் வென்றது.

(ஐ)




## இன்றைய ஆட்டம்

பாரிஸ், ஜூன் 19

பிரான்ஸில் நடைபெறும் உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டித் தொடரில் இன்று — இலங்கை நேரப்படி இரவு — இரு ஆட்டங்கள் இடம்பெறவுள்ளன.

இன்றைய போட்டிகளில் மோதும் அணிகள் வருமாறு:

★ இரவு 9.30 மணி — நைஜீரியா எதிர் பல்கேரியா.

★ இரவு 1.00 மணி — ஸ்பெயின் எதிர் பரகுவே.

(ஐ)

## ★ ★ ★ உலக கிண்ண துணுக்குகள்

இது வரை நடைபெற்ற உலகக் கிண்ண உதை பந்தாட்டப் போட்டிகளில் 15 போட்டிகளில் பங்குபற்றிய ஒரே நாடு பிறேசில் ஆகும்.

### வேலைக்கு 'டாட்டா!'

வேலையில்லாத் திண்டாட்டம்உலகையே உலுக்கும் வேளையில் உலகக் கிண்ணப் போட்டியை கண்டு களிப்பதற்காக தென்மேற்கு ரோக்கியோவைச் சேர்ந்த ஷிகேகி சகுராய்என்ற 31வயது இளைஞர் தனது வேலையில் இருந்து விலகியுள்ளார்.

இறக்குமதி கார் விற்பனை நிலையம் ஒன்றில் இவர் தொழில் புரிந்துவந்தார். (ஐ)

### மஞ்சள் அட்டை

உலக உதைபந்தாட்ட வீரர்கள் முரட்டுத்தனமாக விளையாடுவதைத் தடுப்பதற்காக அவர்களுக்கு மஞ்கள் அட்டை கட்டும் முறை 1974 இல் அறிமுகப்படுத்தப்பட்டது.

முரட்டுத்தனமான விதத்தில் விளையாடும் வீரர்களுக்குஇந்தஅட்டை அணியப்படும்.

இது வரை அதிக எண்ணிக்கையான மஞ்சள் அட்டையைப் பெற்ற நாடு ஆர்.ஜென்ரீனா.அந்நாட்டு அணியினருக்கு இது வரை 61 மஞ்சள் அட்டைகள் கட்டப்பட்டுள்ளன.

## டாக்டர்களின் முயற்சியால்

# ஐந்தரை மாதத்தில் பிறந்த குழந்தை உயிர்தப்பியது!

கொச்சி ஜூன் 19

கருவுற்று ஐந்தரை மாதத்தில் பிறந்த 510 கிராம் நிறையுடையசிசுவைகேரளா டாக்டர்கள் உயிர் பிழைக்க வைத்துள்ளனர்.

கொச்சியில் தனியார்மருத்துவ நிலையம் ஒன்றில் இக் குழந்தை கடந்த பெப்ரவரியில் பிறந்தது. அதன்குறைப் பிரசவம், நிறை என்பன காரணமாக அதனைக் காப்பாற்றுவது டாக்டர்களுக்குப் பெரும் சவாலாக இருந்தது.

எனினும் டாக்டர் பி.கே. ராஜீவ் தலைமையிலான மருத்துவக்குழுவினர் அச் சிசுவைக் கண்ணும் கருத்துமாக முழு வளர்ச்சியடையச் செய்தனர், தற்போது அதன் நிறை ஒருகிலோ 700 கிராம் களாகியுள்ளது.

சிசுவின் மூளை, கண்கள் என்பனவும் பூரண வளர்ச்சியடைந்துள்ளன. இன்னும் ஓரிரு நாள்களில் குழந்தையை வீட்டுக்கு அனுப்புவோம். அதன் பின் 5 வயது வரை அதைக் கண்காணித்து வருவோம் என்று டாக்டர் தெரிவித்தார்.

(ஐ-10)

## திருப்பதிக்கு வைர ஆபரணம்

திருப்பதி, ஜூன் 19

திருப்பதி ஸ்ரீ வேங்கடேஸ்வரப் பெருமாளுக்கு 50 லட்சம் ரூபா பெறுமதியான வைரம், இரத்தினம் பொறிக்கப்பட்ட தங்க ஆபரணத்தை காணிக்கையாக அளிக்க வெளிநாட்டு பக்தர் ஒருவர் முன்வந்துள்ளார்.

வேங்கடேஸ்வரர் சிலையின் வலது மார்பில் அணிவிக்கப்படும் 'ஸ்ரீ வஸ்த' ஆபரணமே காணிக்கையாக வழங்கப்படுகிறது.

இத்தகவலை தேவஸ்தான அதிகாரிகள் தெரிவித்தனர். இந்த வெளிநாட்டு பக்தர் தனது பெயரைவெளியிட விரும்பவில்லை.

(ஐ-10)

## கம்போடியாவில்

# உலகப்போட்டி காண படையினருக்கு ஓய்வு

நொம்பென், ஜூன் 19

உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளை ரீ.வியில் ரசிப்பதற்காக கம்போடியாவில் அரச எதிர்ப்பு படையினருக்கு சண்டை ஓய்வு வழங்கப்பட்டிருக்கிறது.

நாட்டின் வடபகுதியில் உள்ள தளங்களில் இருந்தவாறு போட்டியைக் கண்டுகளிக்க அவர்களுக்கு தொலைக் காட்சிகளும் வழங்கப்பட்டிருப்பதாக தளபதி ஒருவர் தெரிவித்தார்.

முதலாவது பிரதமர் நொரடோம் றணரித்துக்கு ஆதரவான படைகள் கம்போடியாவின் வடபகுதியில் அரச படைகளை எதிர்த்து சண்டையிட்டு வருகின்றன. (ஐ)

# லீவு பெறுவதற்காக மணம் முடிக்கும் ரசிகர்கள்

ரோக்கியோ, ஜூன் 19

உலகக் கிண்ண உதை பந்தாட்டத்தில் ஜப்பான் நாட்டு வீரர்கள் முதன் முறையாகக் கால் பதித்துள்ளனர்.

இப் போட்டியைத் தொலைக் காட்சியில் ரசிப்பதற்காக ஜப்பானிய ரசிகர்கள் சிலர் திருமணஞ் செய்து கொண்டுள்ளனராம்.

திருமணந் தவிர்ந்த ஏனைய தேவைகளுக்கு 10 நாள்களுக்கு மேல் அலுவலக லீவு கிடைப்பதில்லை. எனவே திருமணஞ் செய்து [illegible] நாள்களில் உதைபந்தாட்டத்தைக் [illegible] பலர் முடிவு செய்தனராம். (ஐ)



உலக உதைபந்தாட்டப் போட்டியின் தொடக்க ஆட்டத்தில் பிரேசில் அணிக்கு கிடைத்த வெற்றியை தொலைக்காட்சியில் கண்ட உற்சாகத்தில் ரியோடி ஜெனிரோ நகரக் குழந்தைகள்.

நம்பிக்கை நட்சத்திர வீரர் ரொனால்டோவுக்குப் பிடித்த சட்டையை இவர்கள் அணிந்துள்ளனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜூன் 19 தியாகிகளின் தினம்


தமிழ் மக்களின் விடுதலைக்காகவும், மலையக தோட்டத் தொழிலாளர்கள் சிங்கள முற்போக்காளர்கள், முஸ்லிம் மக்களுடன் ஐக்கியத்திற்காகவும், தமிழர் இயக்கங்கள், கட்சிகளிடையே ஒற்றுமைக்காகவும், சர்வதேச அரங்கில் ஏகாதிபத்தியத்திற்கு எதிராகவும், தேசிய விடுதலைக்காகவும், சமூக மாற்றத்திற்காகப் போராடும் சக்திகளுடன் உறவுக்காகவும், போராட்ட அரங்கினுள்ளே ஜனநாயகத்திற்காகவும், மனித வாழ்வின் மகத்துவத்தை உறுதி செய்வதற்காகவும் போராடிய

# எமது மாபெரும் தோழர் பத்மநாபா

அவர்களுக்கும்

## மறைந்த தோழர்களுக்கும், போராளிகளுக்கும், பொது மக்களுக்கும்

## எமது இதய அஞ்சலிகள்



"எமது இலக்கை அடைவதற்கான போராட்டப் பாதையானது சுலப மான, நேரான தன்மையைக் கொண்டதல்ல. எமது போராட்டத்தோடு பல்வேறுபட்ட சக்திகள், நிலைமைகள், தொடர்புடையதாக செயற்பட்டு வருகின்றன. இவற்றின் விளைவாக எவ்வளவோ நெளிவு சுழிவுகளை - மேடுபள்ளங்களை - சந்திக்க நேரிடுகிறது. அவ்வாறான சந்தர்ப்பங் களில் மூடத்தனமாக முட்டி மோதி எமது போராட்ட இலக்குகளுக்கு நாமே அழிவு தேடிவிடக்கூடாது என்பதில் மிக நிதானமாகச் செயற்பட வேண்டி யுள்ளது.

- தோழர் பத்மநாபா

## ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி

## (ஈ.பி.ஆர்.எல்.எவ்.)

(சி/4025)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடளாவிய தமிழ்த்தினப் போட்டியில் யாழ். மாணவருக்கும் வாய்ப்பளிக்குக!

## ஆளுநருக்கு அதிபர் சங்கம் மகஜர்

திருநெல்வேலி, ஜூன் 19

யாழ். மாவட்டகல்வி வலயங்களுக்கிடையே தமிழ்த் தினப் போட்டிகளை நடத்தி அதில் தெரிவு செய்யப்படுவோர் அகில இலங்கை ரீதியில் நடத்தப்படவுள்ள தமிழ்த் தினப்போட்டிகளில் நேரடியாகப் பங்குபற்றுவதற்கு வசதி செய்யப்பட வேண்டும்.

வட மாகாண அதிபர்கள் சங்கம் திருகோணமலையில் உள்ள வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநருக்கு நேற்று அனுப்பி வைத்துள்ள மகஜர் ஒன்றில் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளது.

திருகோணமலையில் தற்போது நடைபெற்று வரும் மாகாண மட்டத்திலான தமிழ்த் தினப்போட்டிகளில் கலந்து கொள்வதற்கு கப்பல் வசதி செய்து தருவதாக மாகாண கல்வி அமைச்சு அறிவித்திருந்த போதிலும் கடைசி நேரத்தில் அது கைவிட்டு விட்டது மிகவும் கவலைக்குரியதொரு விடயமாகும். தனிப்பட்ட முறையில் விமானத்தில் போவதற்கும் வசதி செய்யப்படவில்லை. எமது மாணவர்கள் கலந்து கொள்ள சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று கல்வி அமைச்சு கருதியிருந்தால் இப்போட்டியை வேறு ஒரு திகதிக்கு ஒத்தி வைத்து வேறு ஒரு திகதியில் நடத்தியிருக்க முடியும் என்றும் மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விரைவில் நடத்தப்படவுள்ள மாகாண மட்டத்திலான மெய்வல்லுநர்போட்டியிலும் யாழ். மாணவர்கள் பங்குபற்றுவதற்கு போக்குவரத்து வசதிசெய்து கொடுக்கப்பட வேண்டும். கண்டியில் அண்மையில் நடத்தப்பட்ட சாரணர் ஜம்போறியில் கலந்து கொண்ட யாழ். மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு இலவச விமானப் போக்குவரத்து வசதி செய்து கொடுத்தது போல மெய்வல்லுநர் போட்டியில் கலந்து கொள்ளவிருக்கும் மாணவர்களுக்கும் போக்குவரத்து ஏற்பாடு செய்து தரப்பட வேண்டும் என்றும் அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஐ-135)

## அனலைதீவு ஆஸ்பத்திரியில் வைத்திய அதிகாரி இல்லை

அனலைதீவு அரசினர் வைத்தியசாலையில் வைத்திய அதிகாரி இன்மையால் நோயாளர்கள் ஊர்காவற்றுறைக்குச் சென்றே சிகிச்சை பெற வேண்டியுள்ளது.

அங்கு கடமையில் இருந்த வைத்திய அதிகாரி சுகயீன விடுமுறையில் சென்றுள்ளதாகவும் பதில் கடமைக்கு எவரும் நியமிக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஆறுமாதங்களாக அங்கு தாதிமார் எவரும் நியமிக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

(ஐ-111)

## பல்கலைக்கழகங்களின் 'மினி' ஒலிம்பிக்கிற்கு 100 யாழ். வீரர்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 19

மாத்தறையில் நடைபெறவிருக்கும் 'மினி ஒலிம்பிக்' போட்டியில் யாழ். பல்கலைக்கழகத்திலிருந்து நூறு வீரர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

நான்கு வருடங்களுக்கு ஒருமுறை பல்கலைக்கழகங்களுக்கிடையில் இந்த மினி ஒலிம்பிக் போட்டி நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

இந்தப் போட்டியில் யாழ். பல்கலைக்கழகத்திலிருந்து 100 வீரர்களை உள்ளடக்கிய ஒன்பது அணிகள் கலந்து கொள்ளவுள்ளன.

மினி ஒலிம்பிக் போட்டியில் கலந்து கொள்வதற்காக யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் தற்போது தீவிர பயிற்சிகளைப் பெற்று வருகின்றனர்.

கடந்த காலங்களில் நடைபெற்ற மினி ஒலிம்பிக் போட்டிகளில் உதைபந்தாட்டப் போட்டியில் யாழ். பல்கலைக்கழக அணியினர் வெற்றி பெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-5)

## மனித உரிமை பிரகடனம்: 50 ஆண்டுகள் பூர்த்தி

கொழும்பு, ஜூன் 18

சர்வதேச மனித உரிமைகள் பிரகடனம் செய்யப்பட்டு 50 ஆண்டுகள் ஆகின்றன. எனினும் அரசுகள்தன் குடிமக்களுக்கு எதிராகவே செய்யும் கொடூரங்களும் அநீதிகளும் தொடர்கின்றன.

இப்படி சர்வதேச மன்னிப்புச் சபை நேற்று முன்தினம் வெளியிட்ட 1997 ஆம் ஆண்டுக்கான அறிக்கையில் தெரிவித்துள்ளது.

கீழ்த்தரமான சித்திரவதைகள், சட்ட விரோதமான கொலைகள், கைது செய்து காணாமற் போதல், அரசியலில் மாற்றுக் கருத்துடையோரை சிறையில் அடைத்தல் ஆகிய மனித உரிமை மீறல்களில் ஈடுபடுவதாக 145 நாடுகளை தனது 97ஆம் ஆண்டுக்குரிய அறிக்கையில் பட்டியலிட்டுள்ளது.

சர்வதே மன்னிப்புச் சபை, ஆபிரிக்க ஆசிய நாடுகள் அந்த அட்டவணையில் முதலிடம் வகிக்கின்றன.

சிறுபான்மை மக்களுக்கெதிரான இராணுவ அராஜகம், சட்டத்துக்குப் புறம்பான கைதுகள், விசாரணை இன்றிப் படுகொலைகள், இராணுவத்தினரால் பெண்களை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தல் ஆகிய குற்றங்களுக்காக இலங்கையும் இந்தப் பட்டியலில் முக்கியஇடம் பெற்றுள்ளது. (இ-6)

## யாழ். பல்கலைக்கழகத்தில் 'உயிர்நுட்பு' மையம்

யாழ்ப்பாணம், ஜூன் 19

யாழ். பல்கலைக்கழகத்தில் எதிர்வரும் 28 ஆம் திகதி 'உயிர்நுட்பு மையம்' ஒன்றைத் திறப்பதற்கான முயற்சிகளை துணைவேந்தர் பேராசிரியர் பொ. பர்லசுந்தரம்பிள்ளை மேற்கொண்டு வருகின்றார்.

யாழ். பல்கலைக்கழகத்தில் இந்த உயிர்நுட்பு மையம் அமைவதன் மூலம் சர்வதேச ரீதியில் தொழில்நுட்ப விஞ்ஞான உதவிகளையும், ஆராய்ச்சிக்கான உதவிகளையும் பெற முடியும் என்று பல்கலைக்கழக உயிரியல் இரசாயனத்துறையினர் தெரிவித்துள்ளனர்.

(இ-5)

## உயிலங்குளத்தில் நெரிசலில் 15பேர் காயம்

இராணுவக்கட்டுப்பாடற்ற வன்னிப்பகுதியில் இருந்து கடந்தசெவ்வாயன்று உயிலங்குளம் ஊடாக இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வரமுயன்ற பயணிகளிடையே ஏற்பட்ட நெரிசலில் சிக்கி 15 பேர் காயமடைந்தனர்.

உள்ளே வர முண்டியடித்த சமயம் ஏற்பட்ட நெரிசலில் சிக்கியும், முட்கம்பி வேலியில் அகப்பட்டுமே இவர்கள் காயமடைந்தனர்.

பயணிகள் காயமடைந்ததையடுத்து படையினர் அனைத்து பயணிகளையும் திருப்பி அனுப்பிய பின்னர் காயமடைந்தவர்களுக்குச் சிகிச்சை அளித்து அவர்களை உள்ளே அனுமதித்தனர் என தெரிவிக்கப்படுகின்றது.

உயிலங்குளம் பாதையூடான பயணத்தின் போது இவ்வாறான சம்பவங்கள் அடிக்கடி ஏற்பட்டு வருகின்றன.

கடந்த சில மாதங்களில் முன்னர் ஒரு பெண் [illegible] நெரிசலில் சிக்கி மரணமடைந்தது தெரிந்ததே.

(இ-164-9)

## பாராட்டு வைபவம்

சுன்னாகம், ஜூன் 19

ஆசிரிய சேவையில் வெள்ளி விழாக்கண்ட நா. நந்தகோபனைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் மல்லாகம் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் மா. நாகேந்திரசீலன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில்ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர், மாணவர்கள் கலந்து கொண்டனர்.

ஆசிரியர்கள் மு. நடராசா, சி. சோதிலிங்கம், என். சுப்பிரமணியம், திருமதி லீ. இராசேந்திரம், திருமதி அ. மாணிக்கவாசகர், செல்வி மல்லிகா ஆகியோரும் உரையாற்றினர். மாணவர்களின் பேச்சும், கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

(ஐ - 27)

## சேவைக்கால கருத்தரங்கு

வலிகாமம்தெற்கு, ஜூன் 19

யாழ். கல்வி வலயம் இரண்டைச் சேர்ந்த தெல்லிப்பழை, சண்டிலிப்பாய், சங்கானை ஆகிய கல்விக்கோட்டங்களில் உள்ள பாடசாலைகளில் விவசாய பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான சேவைக்காலப் பயிற்சிக்கருத்தரங்கு நாளை சனிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

(ஐ-152)

# செய்திக் கொத்து

### சேவை நலன் பாராட்டு

யாழ்ப்பாணம், ஜூன் 19

கோபபாய் கல்விக்கோட்டத்தில் நீண்ட காலமாக எழுதுவினைஞராகப் பணியாற்றி ஓய்வு பெறும் தவபுத்திரி யேசுதாசனின் சேவைநலம் பாராட்டுவிழா நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு கோப்பாய் கல்விக்கோட்ட அலுவலகத்தில் பிரதிக்கல்விப்பணிப்பாளர் ஆ. ராஜேந்திரன் தலைமையில் நடைபெறும்.

(ஐ-ரீ)

### லியோஅங்கத்தவருக்கு பரீட்சை

யாழ்ப்பாணம், ஜூன் 19

சர்வதேச லயன்ஸ் கழகம் பிராந்தியம் 8 இன் மாவட்ட லியோ கழகத் தலைவரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள லியோ அங்கத்தவர்களுக்கான எழுத்துமூலப் போட்டிப் பரீட்சை எதிர்வரும் 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நடைபெறும் என மாவட்டலியோ தலைவர் லயன் பா. தவபாலன் அறிவித்துள்ளார்.

(ஐ-6)

### விண்ணப்பப் படிவங்கள்

நெல்லியடி, ஜூன் 19

ஆசிரியர் தொடர் கல்விப் பாடநெறிப் பயிற்சிக்கான விண்ணப்பப்படிவங்கள் கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரியில் விநியோகிக்கப் படவிருக்கின்றன.

இதனைப் பெறவிரும்புவோர் இன்று முதல் 21 ஆம் திகதி வரை தினமும் காலை 9 மணி முதல் முற்பகல் 11 மணிவரை பெற்றுக் கொள்ளலாமென கரவெட்டி மத்திய நிலைய சிரேஷ்ட போதனாசிரியர் கு. தருமஸ்ரீராஜா தெரிவித்துள்ளார்.

(ஐ-109)

### போட்டியில் முதலிடம்

யாழ்ப்பாணம், ஜூன் 19

யாழ். மாவட்டத்தில் இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற (அருள் நெறி விழா - 1998 இல்) அறநெறிப் பாடசாலைகளுக்கு இடையிலான ஆன்மீக அறிவுப் புதிர்ப் போட்டியில், யாழ். வண்ணை - சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய சைவ சமய அபிவிருத்திக் கழகத்தின் அறநெறிப் பாடசாலை மாணவர்கள் முதலிடத்தைப் பெற்றுள்ளனர்.

இப் போட்டியில் மேற்படி கழகத்தின் அறநெறிப் பாடசாலை மாணவர்கள் சா. ஸ்ரீ கோகுலன், பொ. ஆச்சனா ஆகியோர் பங்கு பற்றினர்.

(ஐ-ரீ)

### மெய்வல்லுநர் போட்டி

சுன்னாகம், ஜூன் 19

குப்பிளான் விக்கினேஸ்வரா மகா வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் புதன் கிழமை பிற்பகல் 1.30 மணிக்குப் பாடசாலை விளையாட்டுத் திடலில் நடைபெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக உடுவில் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ. தற்பரானந்தனும், சிறப்பு விருந்தினர்களாக முன்னாள் அதிபர் மு. வேலாயுதம், பலாலி ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் சிவ. மகாலிங்கம், உடுவில் பிரதேச செயலர் ஆ. மகாலிங்கம் ஆகியோரும் கலந்து கொள்வர்.

(ஐ-27)

### ஆலயத்துக்கு கலசங்கள்

தென்மராட்சி, ஜூன் 19

எழுதுமட்டுவாழ் சிவன் கோயிலுக்கு சுவிற்சர்லாந்தில் இருந்து கொண்டு வரப்பட்ட செப்புக்கலசங்கள் கடந்தசனிக்கிழமை பொருத்தப்பட்டன.

சுவிஸில் இருந்து திரும்பிய ஒரு குடும்பத்தினரே இக் கலசங்களை கொண்டுவந்து ஆலயத்திற்கு வழங்கினர்.

(ஐ-117)

### ஆண்டு நிறைவும் பரிசளிப்பும்

மானிப்பாய், ஜூன் 19

மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலையின் 162ஆம் ஆண்டு நிறைவு விழாவும், பரிசளிப்பு வைபவமும் அண்மையில் பாடசாலை அதிபர் திருமதி ச. யோகேஸ்வரன் தலைமையில் நடைபெற்றன.

(ஐ-8-90)

### வீதி சேதம்

தென்மராட்சி, ஜூன் 19

கனகன்புளியடிச் சந்தியிலிருந்து யார்க்கரு வரையுள்ள வீதியும், இவ்வீதியிலுள்ள இரண்டு பாலங்களும் சேதமடைந்த நிலையிலுள்ளன. இவற்றுக்கு அண்மையிலிருக்கும் தற்காலிக வீதிகளும் வாகனங்கள் போக்குவரத்துச் செய்ய முடியாதளவுக்கு சேதமடைந்துள்ளன.

(ஐ-8-117)

### புதிய மின்கம்பங்கள்

அரியாலை, ஜூன் 19

யாழ். மாநகரப் பகுதியில் உள்ள வீதிகளில் இலங்கை மின்சாரசபையினர் புதிய மின்கம்பங்களை நாட்டி வருகின்றனர்.

முன்பு இருந்த மின்கம்பங்கள் பல சேதமடைந்துட்ளதை அடுத்து புதிய மின்கம்பங்கள் மாற்றப்பன்டு வருகின்றன. (ஐ-17)

### இடமாற்றம்

நெல்லியடி, ஜூன் 19

யாழ். ஆரம்ப நீதிமன்றில் பதில் பதிவாளராகப் பணி புரிந்த எஸ். சந்திரலிங்கம் இம்மாதம் முதலாம் திகதி முதல், பருத்தித்துறை மாவட்ட நீதிமன்ற பதில் பதிவாளராக இடமாற்றலாகியுள்ளார். ஐ-8-109)

### ஆலயம் புனரமைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 19

நாகர் கோயில் நாகதம்பிரான் ஆலய புனருத்தாரண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ஐ-7)

### 5 ஆயிரம் கொடுப்பனவு

வலிகாமம் தெற்கு, ஜூன் 19

மானிப்பாய் வடக்கில் அண்மையில் வன்னியில் இருந்து வந்து மீளக் குடியமர்ந்துள்ள பதினேழு குடும்பங்களுக்கு மீளக்குடியமர்வுக் கொடுப்பனவான 5 ஆயிரம் ரூபாவினை வழங்க சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினர் உடனடி நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ-152)

### அதிர்ஷ்டச் சீட்டிழுப்பு

வலிகாமம் தெற்கு, ஜூன் 19

இலங்கை வங்கி சுன்னாகம் கிளையில் தமது பணத்தைச் சேமிப்பிலிடுபவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு இவ் வங்கிக் கிளையில் அதிர்ஷ்டச் சீட்டிழுப்பு நடைபெற்று தெரிவு செய்யப்பட்டோருக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன.

ஒவ்வொரு வருடமும் மார்ச், ஜூன், செப்ரெம்பர், டிசம்பர் ஆகிய மாதங்களில் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்டு பரிசுகள் வழங்கப்படுகிறது.

(ஐ-8-152)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுன்னாகம் பல நோ. கூ. சங்கம் (வ-து)

சுன்னாகம்

### அறிவித்தல்

சுன்னாகம், இணுவில், யாழ். போதனா வைத்தியசாலை ஆகிய இடங்களில் சங்கத்தினால் நடத்தப்படும் தேநீர் சிற்றுண்டிச்சாலைக்கு தேநீர் தயாரிப்பாளரும், உணவு பரிமாறுவோரும் தேவையாக உள்ளது. விண்ணப்பிக்க விரும்புவோர் **25-06-98** ஆம் திகதிக்கு முன்னர் நேரில் சமுகம் தருமாறு கேட்டுக் கொள்கின்றோம். சம்பளம் நேரில் பேசித் தீர்த்துக் கொள்ளப்படும்.

— பொதுமுகாமையாளர்.

சுன்னாகம் பல நோ. கூ. சங்கம்,
சுன்னாகம்.
17-06-98

(சி/4043)

## தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

[வரையுள்ளது]

### பயிற்சிகளுக்கு விண்ணப்பம் கோரல்

எமது சங்கத்தால்,

★ தட்டெழுத்தும் சுருக்கெழுத்தும் – ( தமிழ் / ஆங்கிலம் )
★ மனையியல் ( தையல், கோலம், பூவேலை, தலையலங்காரம், ஐசிங், சிற்றுண்டி தயாரித்தல்.)
★ கால்நடை வளர்ப்பு.
★ தலைமைத்துவம்.
★ வீட்டுத் தோட்டம்.

ஆகிய பயிற்சிகள் நடத்தப்படவுள்ளன. மனையியற் பயிற்சி தவிர்ந்த ஏனையவற்றிற்கு இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்ப முடிவு திகதி **1998 - 06 - 30**

முன்னர் விண்ணப்பித்தவர்கள் விண்ணப்பிக்கத் தேவையில்லை.

பொது முகாமையாளர்,
தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்கம்.

துர்க்காபுரம்.
1998. 06. 16

(சி/4037)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வன்

### குகதாசன் சிறீதரன்

தோற்றம் 30 — 10 — 1967
மறைவு 29 — 06 — 1997

திதி:- 19 — 06 — 1998

மூத்தண்ணா உன் நினைவில்- ஒரு
முழுவருஷம் போச்சுதடா!
காத்தருள்வாய் நாச்சிமாரே- எம்
கவலைகளை ஏற்றருள்வாய்!

நித்தமும் உன் நினைவில் வாழும்:
அப்பு, அம்மா,
சின்னண்ணா (அச்சா)

இமையாணன், உடுப்பிட்டி.

(56852)

## சவர்க்காரம் எடுத்துசெல்ல தடை

குருநகர், ஜூன் 19

புங்குடுதீவுக்கு சவர்க்காரம் கொண்டு செல்லத்தடை விதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

அண்மையில் அங்குள்ள கர்ப்பிணித் தாய்மாருக்கு வழங்கவென எடுத்துச் செல்லப்பட்ட சவர்க்கார வகைகள் திருப்பி அனுப்பப்பட்டுள்ளதாக அறிய வந்தது.

(ஐ-51-ரீ)

## கட்டுப்பாடு தளர்வு

செம்பியன்பற்று, ஜூன் 19

வடமராட்சி கிழக்கு நாகர் கோயில் பகுதியில் படையினரின் கட்டுப்பாட்டில் வந்ததைத் தொடர்ந்து வடமராட்சி வல்லிபுரக் கோயில் காவலரண் ஊடாக உணவுப் பொருள்கள் எடுத்துச் செல்ல விதிக்கப்பட்டு வந்த கட்டுப்பாடு தளர்த்தப்பட்டுள்ளது.

(ஐ-8-36)

## முத்தமிழ் விழா

யாழ். திருமறைக் கலாமன்றத்தின் தமிழ் விழா எதிர்வரும் 26, 27, 28 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

இம் மூன்று தினங்களிலும் கருத்தரங்குகள் தினமும் காலை 9.00 மணியளவில் ஆரம்பமாக உள்ளன. இக் கருத்தரங்குகள் யாழ். நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறும்.

கலை நிகழ்ச்சிகள் மாலை வேளைகளில் தினமும் 5.00 மணிக்கு யாழ். திருமறைக் கலாமன்ற அரங்கில் நடைபெறும்.

(ஐ-51)

## கலந்துரையாடல்

கொழும்புத்துறை, ஜூன் 19

யாழ். குடாநாட்டில் உள்ள இந்துக் கோயில்களின் பூசை நேரங்கள், திருமுறைப்பாராயணம், நற்சிந்தனைகள் பற்றிய கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நல்லூர் சிவன் கோயிலுக்கு முன்னால் உள்ள யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவைக் காரியாலயத்தில் நடைபெறும்.

( ஐ-30 )

## சேவைநலன் பாராட்டு

யாழ்ப்பாணம், நல்லூர், வேலணை, ஊர்காவற்றுறை ஆகிய கல்விக் கோட்டங்களின் பிரதிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி தமது 60 வயதைப் பூர்த்தி செய்து அண்மையில் தமது சேவையில் இருந்து இளைப்பாறிய வ. தானையாவுக்கு இக் கல்விக் கோட்டங்களில் கடமைபுரியும் அலுவலர்களினால் கடந்த வாரம் சேவைநலன் பாராட்டுவிழா நடத்தப்பட்டது.

ஒன்றிணைக்கப்பட்ட கல்விக் கோட்டங்களில் அலுவலக உதவியாளராகக் கடமையாற்றும் செ. மெற்றாஸ்மயில் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் அவரது சேவையைப் பாராட்டி பலரும் உரையாற்றினர்.

(ஐ-51)

## அறநெறிப் பாடசாலை

குருநகர், ஜூன் 19

அரியாலை ஸ்ரீ ஞானவைரவர் கோயில் அறநெறிப் பாடசாலையில் அறநெறிக் கல்வி பாடத்திட்டத்துக்கமைய மாணவர்களுக்கு கல்வி போதிக்கப்படுகிறது. இங்கு ஆண்டு 1 தொடக்கம் ஆண்டு 11 வரை இப் பாட நெறி போதிக்கப்படுகிறது. இதன் அதிபராக அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயத் [illegible] பர் க. சிவராஜா பணிபுரிகின்றார்.

(ஐ-8-51)

## அளவெட்டி வடக்கு தவளக்கிரி முத்துமாரி அம்மன்

மேற்படி ஆலய வருடாந்தப் பெருவிழா 21-06-98 ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 01 – 07 – 98 புதன்கிழமை ஆனி உத்தரத்தன்று தீர்த்தத் திருவிழாவுடன் முடிவு பெறும் என்பதை அம்பாள் அடியார்கள் அனைவரும் அறியும் வண்ணம் தெரிவிக்கின்றோம்.

- நிர்வாக சபையினர்

(56944)

## வெற்றிவேலு மாஸ்ரர் நலன் பேணும் பழையமாணவர் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம்

இடம்:- வெற்றிவேலு மாஸ்ரர் இல்லம்

காலம்:- **21 – 06 – 98** ஞாயிற்றுக்கிழமை பி. ப. **4. 00** மணி

குறிப்பு: எமது மாஸ்ரர் அண்மைக் காலமாக உடல் நலம் பாதிப்படைந்து நடமாட முடியாத நிலையில் உள்ளார். எனவே அங்கத்தவர்கள், நலன் விரும்பிகள் அனைவரும் சமுகந்தந்து ஒத்துழைப்பு நல்குமாறு வேண்டுகின்றோம்.

செயலாளர்

( C/4046 )

## கேசவன் பான்சி

▼ அழகுசாதனப் பொருள்கள்
▼ கவரிங் நகைகள்
▼ பரிசுப் பொருள்கள்
▼ சிறுவர் விளையாட்டுப் பொருள்கள்
▼ மற்றும் றேடியோ உபகரணம்

யாவற்றையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள

**கேசவன் பான்சி**

சங்கரப்பிள்ளை வீதி, மானிப்பாய்.
(மானிப்பாய் இந்துக் கல்லூரி முன்பாக)

(56957)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



திருமதி

### சிவகுரு சிவபாக்கியம்

(தவமணி)

தோற்றம் 1920–03–02
மறைவு 1998–05–20

மெல்லெனப் பேசி நாளும் இன்னல்கள் தீர்த்து வைத்து
இல்லத்தின் ஒளி விளக்காய்த் திகழ்ந்த எம் அன்னையே!
எல்லையில் கருணைமிக்க இறைபதம் அடைந்த தன்மை
சொல்லினில் அடங்கற் பாற்றோ சுற்றமே தவிக்குதம்மா!

இன்று (19—06—1998) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் இடம்பெறும் அன்னாரின் ஆத்ம சாந்திக் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

131/4, பருத்தித்துறை வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்

(56953)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## உதயன்

### மனம்வருமா?

சுயதொழில் ஊக்குவிப்புக்கென மக்கள் வங்கி ஐம்பதினாயிரம் ரூபா வரை கடனுதவி வழங்கு திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த உள்ளதாக யாழ். வங்கியின் பிராந்திய முகாமையாளர் எஸ். இளம்பிறைநாதன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் நீண்ட பல காலமாக அரசாங்க வங்கிகள் கடன் வழங்கும் திட்டங்களை நிறுத்தியிருந்தன. குடாநாட்டில் வங்கியில் பண வைப்புச் செய்வோர் மற்றும் நடைமுறைக் கணக்குகளை வைத்திருப்போரின் எண்ணிக்கை எப்போதும் உயர்ந்த மட்டத்திலேயே இருந்து வருகின்றது. அதாவது குடாநாட்டு மக்களின் பணம் வங்கிகளின் கைகளில்—அரசின் கைகளில்—சேர்ந்ததில் பெருமளவு வீழ்ச்சி கண்டதில்லை.

போர் தொடங்கிய 1990 ஆம் ஆண்டின் பின்னர், பல கஸ்டங்கள் இருந்த போதிலும்கூட குடாநாட்டு மக்கள் வங்கிகளில் இருந்து கணக்கு வைத்திருப்பதிலேயோ பணத்தை சேமிப்பதிலேயோ பின்வாங்கியதில்லை. அதனால் யாழ்ப்பாண மக்களின் பணம் தொடர்ந்து அரசின் கைகளுக்கு தடங்கலின்றி சென்று கொண்டே இருக்கின்றது.

இதனைப் பொருட்படுத்தாது குடாநாட்டு மக்களுக்கு வழங்கப்பட்டு வந்த கடன் வசதிகள் பலவும் 1990 ஆம் ஆண்டின் பின்னர் படிப்படியாக நிறுத்தப்பட்டன: ஒரு கட்டத்தில் எந்த வகைக் கடனையும் அரசாங்க வங்கிகளில் இருந்து பெறமுடியாதவாறு ஒரு வகையான மறைமுக தடை விதிக்கப்பட்டது.

குடாநாட்டு மக்களின் பணம் தெற்கில் ஆரம்பிக்கப்பட்ட அபிவிருத்தித்திட்டங்களுக்கும் தென்னிலங்கை மககளுக்கான கடன்களுக்கும் பயன்பட்டது. இது இப்பகுதி மக்களை வஞ்சித்து அவர்களின் பணத்தைக் கொண்டு தெற்கின் தேவைகளை நிறைவேற்றும் ஒரு செயற்பாடாகவே அமைந்தது.

யாழ்ப்பாணத்தில் அரசாங்கத்தின் சிவில் நிர்வாகம் நடைபெறத் தொடங்கிய பின்னரும் வங்கிகள் மக்களுக்குக் கடன் வசதிகளைச் செய்து கொடுக்கப் பின்னடித்தமை ஆச்சரியப்படக் கூடிய ஒரு நிலையாகும். குடாநாட்டில் சிவில் நிர்வாகம் சிறப்பாக நடைபெறுவதாக வெளிநாடுகளுக்கு பறைதட்டுவதில் இருந்த அக்கறை இங்குள்ள மக்களின் பணத்தையே அவர்களின் தேவைகளுக்கு வழங்குவதில் உரிய அளவில் இருக்கவில்லை. பெயரளவில்சிறியகடன் வசதிகளே செய்யப்படுகின்றன.

அத்தகைய சூழ்நிலையில் குடாநாட்டில் சிறிய கடன்கள் முதல் பெரிய கடன்கள் வரை வழங்க முன்வந்துள்ள மக்கள் வங்கியின் செயற்பாட்டைப் பாராட்டலாம்.

இப்போது அறிவிக்கப்பட்டுள்ள ஐம்பதினாயிரம் ரூபா சுயதொழில் ஊக்குவிப்புக் கடன் திட்டம் பலரும் சிறிய கைத்தொழில்களை சுயமாகவே ஆரம்பிக்க வகை செய்யும்; தேய்ந்து போயிருக்கும் குடாநாட்டின் சிறு கைத்தொழில் சிறிதளவேனும் மீண்டும் தலையெடுக்கப் பெரிதும் உதவும்.

இந்த முன்னுதாரணத்தைப் பின்பற்றி ஏனைய அரச வங்கிகளும் குடாநாட்டு மக்களின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் வகையில் பெரிய கடன் திட்டங்களை ஆரம்பிக்க வேண்டும். மனம் வருமா?

# உறுதியான மனதுடன் தொண்டுபுரியவேண்டியது இன்றைய இந்து இளைஞரின் தலையாய கடமை

ஒவ்வொரு சமயமும் நல்ல கோட்பாடுகளைப் போதிக்கின்றது. உலகத்து மக்கள் ஒழுக்கத்துடனும், நற்பண்புகளுடனும் வாழ்வதற்கு சமயங்கள் வழிகாட்டுகின்றன. அருளாளர்களும் ஞானிகளும் காலத்துக்குக் காலம் தோன்றுகிறார்கள். அவர்களிடம் ஈடுபாடு கொண்ட பெரியார்கள் அந்த அருளாளர்களின் போதனைகளை சங்கங்களின் மூலமாகவும், வேறு சாதனங்களின் ஊடாகவும் பிரசாரம், செய்தும், மன்னர்கள் தமது ஆட்சியாளர் மூலமாகவும் தமது மதங்களை வளர்க்கிறார்கள். ஆரம்பத்தில் நல்ல நோக்கம்கொண்டு தொடங்கப் பெற்ற இச்சமயங்கள் பிற்காலத்தில் சண்டை, பூசலுக்கே வழி வகுத்து நாடுகளிடையே சண்டை மூண்டு ஆயிரக்கணக்கான மக்கள் அழிவது வரலாறு தரும் பாடம். இது யாவரும் அறிந்ததே.

அருளாளர்கள் மக்களின் நல் வாழ்விற்காக விட்டுச் சென்ற கோட்பாடுகள் மறக்கப்படுகின்றன. ஆனால்இவர்களுடைய அறிவுரைகளும், கோட்பாடுகளும் தான் என்றும் மனித சமுதாயத்திற்கு வழிகாட்டியாக மிளிர்கின்றன.

மனிதனதுமனத்தின் விலங்கியல்பினை ஒழித்து மனச் செம்மையுடையவனாக வாழ வழி வகுத்தவை இச் சமயங்களே. இந்தச் சமயங்கள் கூறும் நற் கோட்பாடுகள் யாவும் எமது சமயமாகிய இந்து சமயத்தில் இருக்கின்றன என்பது பெரியோரும் கற்றோரும்காட்டும்உண்மை. இந்துசமயம் எப்போது யாரால் தொடக்கப்பட்டது என்பதற்கு எவரும் பதில் கூறமுடியாது. பல்லாயிரம் வருடங்களுக்கு முன்னரே இந்து சமயக்கோட்பாடுகள் நிலைத்து நின்றுள்ளன என்பதற்கு அமெரிக்காவின் கொலராடோ மாநிலத்துச் சிவன் கோயில்களும் மொஹஞ்சதாரோ ஹரப்பா ஆகிய இடங்களில் நடத்தப்பெற்ற தொல்பொருளாய்வுகளும் சான்று பகர்கின்றன.

பரந்து விரிந்த தத்துவங்களைக் கொண்டுள்ள இந்து சமயம், ஏனைய மதங்களுடைய அடிப்படைக் கொள்கைகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது. தற்கால அறிவியல்–விஞ்ஞானக்கண்டுபிடிப்புகளுக்கும் விளக்கம் கொடுத்து விரிவடையக் கூடியதாக அமைந்துள்ளது. இதனால் விஞ்ஞானம் மெய்ஞ்ஞானத்திற்கும், மெய்ஞ்ஞானம் விஞ்ஞானத்திற்கும் அரண் செய்வனவாக இருக்கும் தன்மையை உணரக் கூடியதாயுள்ளது. இந்துசமய அடிப்படைக் கோட்பாடுகளைக் கற்றோர், சமயத்தின் அழிவிற்கு விஞ்ஞானம் அடிகோலவில்லை என்பதை

**ஞானக் கதிர்**

நுணுகி ஆராய்ந்தோர் நன்கு தெளியலாம். இது இவ்வாறிருக்க, தம்மைச் சீர்திருத்தவாதிகள் அல்லது கற்றுத் தெளிந்தோர் என்று கருதும் சிலர், உண்மையை திரித்துக் கூறி தற்கால அறிவியல் வளர்ச்சிக்கு இந்து சமயக் கோட்பாடுகள் முழுதும் மாறானவை என்று வாதிக்கின்றனர். சமுதாய நன்மைக்காக ஏற்பட்ட சில சமயப் பழக்க வழக்கங்களையும் இவர்கள் இகழ்ந்து பேசுவதையும் காணலாம். பொருளாதார வளர்ச்சிக்குச் சீர்திருத்தம் வேண்டியதே. ஆயினும் மனித இனம் உயர்ந்த இலட்சியங்களைப் பேணுவதற்கு இந்த மனப்பான்மை இடையூறாகவே உள்ளது. சமய அடிப்படைக் கொள்கைகளை காலத்துக்குக் காலம் மாற்றினால் சமயமே ஒழிந்து அராஜகமே தலைதூக்கும் என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். இந்தச் சீர்திருத்தம் என்பது சமுதாய நன்மைக்கு உறுதுணையாகவும், நமது சமயத்தைக் கடைப்பிடிக்க ஊன்றுகோலாகவும் உதவவேண்டும். இக் கருத்தையே சுவாமி விவேகானந்தர் ''எனக்குச் சீர்திருத்தத்தில் நம்பிக்கையில்லை. வளர்ச்சியிலே நம்பிக்கையுண்டு'' என்று கூறுவதிலிருந்து அறிந்துகொள்ளலாம்.

இந்து சமயத்தவர் சிலர், சமய அறிவு சிறிதுமில்லாதவராயிருந்தும்- சர்வ சமய சமரசம் பேசுவதைக் காண்கிறோம். ஒரு குறித்த இடத்தை நாம் சென்றடையப் பல வழிகள் இருக்கலாம். ஆனால், அதை அடைய விரும்புவோர் ஏதோ ஒரு வழியால் தான் செல்ல வேண்டும். தமது சமயம் வகுத்த வழியிற் செல்லாது ஏதோ ஒரு காரணத்திற்காகத் தட்டிக் கழிக்கத்தான் இந்த 'சமரசம்' பலருக்கும் உதவுகிறது போலும். ஒரு நல்ல இந்து சமயத்தவரோ, அல்லது தம்மைச் சைவ சமயத்தவர் என்று கூறுபவரோ தம் சமயத்தை நன்றாகத் தெரிந்துகொண்ட பின்னரே மாற்றுக் கருத்தைக் கூறி சமரசம் பற்றி விவாதிக்கலாம். எமது சமயத்தவர் சிலர் தமது சமய அறிவை விருத்தி செய்து கொள்ளாமலே மற்றையோருக்கு அறிவு புகட்ட முற்படுவதைக் காண்கிறோம்.

இதனால் நமது சமய உண்மைகளை நாம் அறிய வாய்ப்புக் கிட்டாமற் போய் விடுகிறது. குழப்பம் ஏற்பட்டு விடுகிறது; நாம் செய்வது சரியா என்பதில் சந்தேகம் வந்து விடுகிறது. இத்தகைய குழப்பத்திலிருந்து விடுபட ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் போன்றோரது நூல்களைக் கற்க வேண்டும். நாவலர் பெருமானுடைய 'தேசாபிமானம், பாஷாபிமானம், மதாபிமானம் இல்லாத மனிதனும் ஒரு மனிதனா?'' என்பன போன்ற உரைகளைப் படித்து உணர வேண்டும்.

இன்றைய உலகில் சமயப் பற்றுள்ள மனிதர் மிகச் சிலரே. அதுவும் இந்து சமயத்தைப் பொறுத்தவரை அதன் நிலை என்ன என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். பழம் பெரு

**சிவதனு**

மையை மட்டும் பேசிக் காலம் கழிக்கலாகாது. இன்றைக்கே நாம் செய்ய வேண்டுவனவற்றைச் செய்தல் வேண்டும். நமது சமயக் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் முழுமனதுடன் கடைப்பிடித்தல் வேண்டும் என்பதை உணர வேண்டும். எமது சமயத்தின் வளர்ச்சியையும், நிலையான தன்மையையும் உறுதி செய்ய வேண்டுவன செய்தல் அவசியம். காலத்துக்குக் காலம் மகான்கள் பிறக்கிறார்கள். அருளாளர்கள் அவதாரம் செய்கிறார்கள். அவர்கள் சொல்லிச் சென்றவற்றை நாம்கடைப் பிடிக்கிறோமா? என்பதைப் பற்றிச்சிந்திக்க வேண்டும். அத்திவாரம் நன்றாக இல்லாத கட்டடம் போலாகாமல் உறுதியான மனத்துடன் சமயத்

(9 ஆம் பக்கம் பார்க்க)

# போராடுவோர் தமது சூழலை ஜனநாயகமாக வைத்திருக்க வேண்டும் என்று விரும்பியவர்

## பத்மநாபாவின் 8 ஆவது நினைவு தினம் இன்று

தோழர் பத்மநாபா தமிழ் மக்களின் விடுதலையுடன், ஏற்றத்தாழ்வு இல்லாத சமூக அமைப்பு. சிங்கள – முஸ்லிம் மக்களுடன் நல்லுறவு, இலங்கையின் சமூக மாற்றத்தில் மலையக மக்களின் பங்களிப்பு ஆகியவற்றில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருந்தவர். இந்த மக்களின் சமூக, அரசியல், பொருளாதார வாழ்வில் மாற்றங்களுக்காக அவர் ஒரு புரட்சிகர வாழ்வை மேற்கொண்டார். அவர் தனது 39 வருட கால வாழ்க்கையில் அரைவாசிக்காலத்தை இவற்றுக்காக அர்ப்பணித்தார். அவரது எட்டாவது நினைவு தினம் இன்று ஜூன் பத்தொன்பதாம் திகதியாகும்.

யாழ். குடாநாட்டு செம்மண் பிரதேச ஒடுக்கப்பட்ட விவசாயிகள், மலையகத் தோட்ட தொழிலாளர்கள், திருமலை மீனவர்கள் மத்தியில் நேரடியாகவே அவர்களில் ஒருவராக அவர்களின் இன்ப துன்பங்களில் பங்கு பற்றி சேவை செய்தார்.

ஹீமா-சாஸ்திரி ஒப்பந்தத்தின்படி இந்தியாவுக்குச் சென்ற மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் படும் பிரச்சினைகளை இந்தியாவிலுள்ள இடதுசாரி இயக்கங்கள், தொழிற் சங்க இயக்கங்களோடு சேர்ந்து அணுகியவர்.

ஈழச்செய்தி தொடர்பகம் என்ற ஓர் அமைப்பை இதே காலப்பகுதியில் இந்தியாவில் உருவாக்கி ஈழச்செய்தி என்ற பெயரில் செய்தித் தொகுப்பு ஒன்றைவெளியிட்டுவந்தார். அந்ததொகுப்பினூடாக ஈழ மக்கள் படும் துயரங்கள் இந்திய மக்களுக்கு. குறிப்பாக தமிழ் மக்களுக்கு எடுத்துச் சொல்லப்பட்டது.

''ஈழச் செய்தி'' பிந்திய காலகட்டத்தில் ''ஈழம் நியூஸ்'' என்ற பெயரில் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டது.

### சர்வதேசப் பார்வை

சர்வதேச அளவில் ஏகாதிபத்திய எதிர்ப்பு இந்தியா எப்போதும் எமது நண்பன் என்று கருதியவர். உலகின் சோஷலிச முகாம், தேசிய விடுதலை இயக்கங்கள், இந்திய இடதுசாரிக் கட்சிகள் உட்பட பல்வேறு இந்திய சுதந்திரப் போராட்ட வீரர்கள், தமிழ்ப்பற்றாளர்கள் ஈ. வெ. ரா. பெரியாரின் பாசறையில் வளர்ந்தவர்கள், சீர்திருத்தக்காரர்கள், பத்திரிகைத் துறையினரின் உன்னதங்களைத் தொட்ட பத்திரிகை ஆசிரியர்கள், அறிவுஜீவிகள் எல்லாவற்றிற்கும் மேலாக இந்திய ரயில்வே தொழிலாளர்கள், துறைமுகத் தொழிலாளர்கள் ஆகியோரின் நண்பர்களாக இருந்தவர் தோழர் பத்மநாபா.

இதை ஏன் இங்கு குறிப்

**த. சுபத்திரன்**

பிடுகின்றோம் என்றால் தோழர் பத்மநாபாவிற்கு ஒரு தேசிய பார்வை மட்டுமல்ல சர்வதேசியப் பார்வையும் இருந்தது. என்பதை சுட்டிக்காட்டவே. விசாலமான எண்ணங்களைக் கொண்ட தலைவர் அவர். ஜனநாயகம் ஒற்றுமை என்பவற்றை அவர் எப்போதும் வலியுறுத்தி வந்தார். தமிழர் இயக்கங்களிடையே அவர் ஒற்றுமையை வலியுறுத்தினார். அதில் மாறுபாடுகளுக்கிடையே தேசிய ஒடுக்குமுறைகளுக்கு எதிரான சக்திகளை ஒன்றிணைக்க முயற்சித்தார்.

இன்னொரு தளத்தில் மலையக, சிங்கள, முஸ்லிம் மக்களை உள்ளடக்கிய ஒரு பரந்து பட்ட சமூக ஜனநாயக இயக்கத்தைக் கனவு கண்டார். அவருடன் நெருங்கிப் பழகிய சிங்கள, முஸ்லிம் மலையக முற்போக்காளர்கள் அதனை அறிவார்கள்.

தமிழ் மக்களின் போராட்டத்திற்கு விஸ்தாரமான தளம் ஒன்றின் அவசியம் அவரால் உணரப்பட்டிருந்தது. உள்நாட்டில் பரந்துபட்ட வெகுஜனங்களின் பங்கேற்பு சர்வதேச விடுதலைப் போராட்ட சோசலிச விடுதலை இயக்கங்களுடனும் ஏகாதிபத்திய எதிர்ப்பு நாடுகளுடனும் உறவு எமது தயார் நிலை என்பவற்றில் அவர் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருந்தார். இதில் ஏதோ ஒன்றில் தவறு நேர்ந்தாலும் எல்லா உழைப்புக்களுமே அவமாகிவிடும் என்பதை உணர்ந்திருந்தார்.

ஆனால் போராடும் இயக்கங்களிடையே ஜனநாயக மறுப்பு ஒரு பெரும் பிரச்சினையாக உருவாகியது. அது மக்களின் நம்பிக்கையை சிதறடித்தது. சர்வதேச அளவில் குறிப்பாக இந்தியாவில் கசப்

(9 ஆம் பக்கம் பார்க்க)

### நாளை

ஆனி - 6
சனிக்கிழமை
திதி: ஏகாதசி
மாலை 06.09 வரை.
நட்சத்திரம்: அச்சுவினி
பிற்பகல் 01.56 வரை.
சுபநேரம் 02.24 - 04.54
ராகுகாலம்: 08.54 - 10.24
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

### உதயவாக்கு

மனிதனின் செயல்கள் ஒரு புத்தகத்தின் பொருளடக்கத்துக்குச் சமம்; அவை அவனிடம் இருக்கும் சிறந்த அம்சங்களை அறிவிக்கின்றன.

தாமஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

யாழ். சச்சேரிச் சூழலில் கண்டி வீதியில் இருந்து 100 யார் தொலைவில் சுண்டுக் குளி பேரின்பநாயகம் ஒழுங் கையில் நான்கு பரப்புக் காணியில் ஊர்திச்சாலை உட்பட சகல வசதிகளுட னும் கூடிய வீடு விற்ப னைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: திருமதி சந்திரா தர்மரட் ணம், 21/1, றக்கா வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பா ணம். (56937)

### உடன் விற்பனை

அழகிய பல இன கலர் வளர்ப்பு மீன்களும், பல நிறங்களுடைய லப்பேட் ஸும் (Love Birds), நல்ல இன புறாக்களும் விற்பனைக்கு உண்டு. மல்லிகாபதி. சந்தை முன் ஒழுங்கை, மானிப்பாய். (56948)

### தேவை

சணக்கியலைப் பாடமாகக் கொண்ட உயர்தரப் பரீட்சை ஒன்றில் சித்திய டைந்தவர்கள் கீழ்வரும் முக வரிக்கு 20 ஆம், 21 ஆம் திகதி களில் நேரில் சமுகந் தரவும். இல. 140, பலாலி வீதி, திரு நெல்வேலி. (பரமேஸ்வராச் சந்தி) (56942)

### காணவில்லை

4 வயது நிரம்பிய வெள்ளை நிற பொமனேரி யன் பெண் நாயை 17-06-98 தொடக்கம் காணவில்லை. ஒப்படைப்போருக்கு சன் மானம் வழங்கப்படும். மகேந்திரன், 183, சென். ஜேம்ஸ் லேன், யாழ்ப்பா ணம். (புனித யாகப்பர் தேவாலயம் அருகில்) (56951)

### தவறிவிட்டன

முதலாம்கட்டை ஒழுங்கை பருத்தித்துறையைச் சேர்ந்த பாலகிருஷ்ணன் தர்ஷினி என் பவரது பாடசாலை, விசேட, தேசிய அடையாள (765840627 V) அட்டைகள், Brigade Pass என்பன தவறி விட்டன. கண்டெடுத்தவர் கள் மேற் குறிப்பிடப்பட் டுள்ள விலாசத்தில் ஒப்ப டைக்கவும். (சி/4047)

### திருமண சேவை

கொழும்புத்துறையில் முன்பு என்னுடன் தொடர்பு கொண்டவர்களும், புதியவர் களும் கல்வியங்காடு, யாழ்ப் பாணம் 3 ஆம் கட்டை வாசிகசாலை ஒழுங்கையில் தொடர்பு கொள்ளலாம்; நேரில் வரமுடியாதவர்கள் தபால் மூலம் தொடர்பு கொள்ளலாம். திருப்தியான தும் துரிதமானதுமான சேவை, மாங்கல்யா மலரி சேவிர்ஸ் கு. திருவிளங்கம். [56917]

## நீர்வளச்சபை அலுவலகம்

நீண்ட காலமாக '601 நாவலர் வீதி, யாழ்ப்பாணம்' என்ற முகவரியில் இயங்கி வரும் நீர்வளச்சபை இட மாற்றம் செய்யப்படாமல் தொடர்ந்தும் அவ்விடத்தி லேயே இயங்கி வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## மெய்வல்லுநர் போட்டி

யாழ். ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வெள்ளிக் கிழமை பிற்பகல் ஒரு மணி யளவில் கல்லூரி மைதானத் தில் அதிபர் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட கல்வித் திணைக்கள பொறியியலா ளர் கு. சிவபாலன் கலந்து கொள்வார். (ஐ-ரீ)

---

## கண்ணீர் அஞ்சலி

எமது வித்தியாலயத்தின் அதிபர்
திரு. எஸ். கே. சண்முகலிங்கம்
அவர்களின் பாசமிகு தந்தையார்

**சுப்பிரமணியம் குமாரசாமி**

அவர்களின் மறைவால் எமது பாடசாலைச் சமூகம் ஆழ்ந்த அனுதாபத்தையும், கண்ணீர் அஞ்சலியையும் காணிக்கையாக்குகின்றது.

ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.
யா/புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகாவித்தியாலயம்.

(56962)

---

## வாழ்த்துக்களும் ஊக்குவிப்பு பணம் வழங்கலும்

**சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில்** 1996 ஆம் ஆண்டு க. பொ. த உயர்தர வகுப்பில் சித்தியெய்தி 1998 ஆம் ஆண்டு பல்கலைக்கழகம் செல்லும் பழைய மாணவர்கள் மற்றும் 1997 ஆம் ஆண்டு க. பொ. த சாதாரண தரத்தில் சித்தி யெய்தி தொடர்ந்து இக்கல்லூரியில் உயர்வகுப்பில் கல்வி கற்கும் மாணவர்களுக்கும் எமது பாராட்டுதல் களையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதோடு 1998 ஆம் ஆண்டு பல்கலைக்கழகம் செல்லும் மற்றும் 1997ஆம் ஆண்டு க. பொ. த. சாதாரண பரீட்சை விசேட சித்தியடைந்து தொடர்ந்து இக்கல்லூரி யில் கல்வி கற்கும் மாணவர்களும் ஊக்குவிப்பு பணம் சம்பந்தமாக தங்களது முழுவிவரங்களை கீழ்வரும் உத்தியோகஸ்தருடன் கடிதமூலம் தொடர்பு கொள்ளவும்.

வே. ஜெனகன் — தலைவர்
சேது விபுலானந்தா — செயலாளர்
த. அ. செல்வராசா — பொருளாளர்

**சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்,
யாழ்ப்பாணம்.**
No. 207, கே. கே. எஸ். வீதி,
சுன்னாகம்.

வாழ்த்துவோர்:

கண்ணாடிகள் விற்பனையாளர்கள்
**இராஜேந்திரா ஸ்ரோர்ஸ்**
192, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்

தொலைத் தொடர்பு வசதிகளுடன்
மின்பிடி உபகரண விற்பனையாளர்கள்
**ஜெஸ்கோ**
190, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

(சி-4041)

---

## ஒன்பதாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 02 — 11 — 1939
உதிர்வு 28 — 06 — 1989

அமரர்
**கந்தையா குலேந்திரா**
(S. L. A. S.)
(உதவி அரசாங்க அதிபரும், வலி. கிழக்கு பிரதேச சபை விசேட ஆணையாளரும்)

திதி: 19 - 06 - 1998

எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய்த் திகழ்ந்து இறைவனடி சேர்ந்த உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கும்:

மனைவி: கு. சிவஈஸ்வரி,
மகன்: கு. சிவேந்திரம்,
சகோதரர்கள்.

''ஈஸ்வரி வாசா''
நந்தாவில் அம்மன் கோவிலடி,
கொக்குவில்.

(சி/ 4049)

---

## மூர்த்தி வீடியோ சென்ரர்

★ CD மூலம் விரைவாக பாடல் பதிவுகள் செய்து கொள்ளவும் —
★ தரமான வீடியோ பிரதிகளைவாடகைக்குப் பெற்றுக் கொள்ளவும்

**மூர்த்தி வீடியோ சென்ரர்**
சங்கரப்பிள்ளை வீதி, மானிப்பாய்.
(மானிப்பாய் இந்துக் கல்லூரி முன்பாக)

(56958)

---

சிவமயம்

## புதுக்கடைத் திறப்பு விழா அழைப்பு

## விஸ்ணு பவான் சைவ உணவகம்

யாழ்ப்பாணம் சிவன் கோயிலடியில் இயங்கி வரும் எமது நிறுவனம் கிளை ஸ்தாபனம் ஒன்றை திருநெல்வேலி பரமேஸ்வராச் சந்தியில் இன்று 19 - 06 - 98 வெள்ளி மதியம் 12 மணியளவில் மங்களகரமாக ஆரம்பிக்கவுள்ளது என்பதை அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக் கும் அறியத்தருகின்றோம்.

குறிப்பு: தனிப்பட்ட அழைப்பிதழ் இல்லை,

தங்கள் அன்பான
யாக்கரை கணேஸ்

(சி/4050)

---

## வாழ்த்துகின்றோம்

பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக்கழகம் நடத்திய இசை நாடகப்போட்டியில் பங்குபற்றி முதலாம்இடத்தினைப் பெற்று பளைப்பிரதேசத்துக்கு பெருமையைச் சேர்த்த

**இரத்தினகுமார் குழுவினரைப்**
பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**பச்சிலைப்பள்ளி அபிவிருத்திக் கழகம்.**
கண்டி வீதி,
பளை.

விளம்பர அன்பளிப்பு:

ஸ்ரீ அம்பாள் தொலைத் தொடர்பகம்
கண்டி வீதி, பளை.

கணபதிப்பிள்ளை களஞ்சியம்
கண்டி வீதி, பளை.

விஜி களஞ்சியம்
கண்டி வீதி, பளை.

(சி-4051)

---

## 31 ஆம் நாள் நெஞ்சகலா நினைவுகள்



தோற்றம் 01 — 03 — 1930
மறைவு 21 — 05 — 1998

திருமதி
**மனோன்மணி வீரசிங்கம்**

எமது குடும்பத்தலைவி திருமதி மனோன்மணி வீர சிங்கம் அவர்களின் இறுதிச் சடங்குகளில் பங்கு பற்றி யோருக்கும், அனுதாபச்செய்தி அனுப்பியோருக்கும், பலவிதமான உதவிகளைச் செய்தவர்களுக்கும், ஆறு தல் கூறியவர்களுக்கும் எமது அன்பு கலந்த நன்றி யைத் தெரிவிப்பதுடன் நாளை சனிக்கிழமை எமது இல்லத்தில் இடம் பெறும் ஆத்ம சாந்திப் பிரார்த் தனைகளிலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

ஊரெழு கிழக்கு,
சுன்னாகம்.

(56919)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம் கல்லூர் சேகரம்

# போராடுவோர் தமது...

(ஏழாம் பக்கத்தொடர்)

பான அனுபவங்களை ஏற்படுத்தியது. அந்த ஜனநாயக மறுப்பே தோழர் பத்மநாபாவின் வாழும் உரிமையைக் கூட மறுத்தது. அதுவே அவரின் மரணம்.

## உறுதி கொண்டவர்

தோழர் பத்மநாபா தனது சொந்தச் சுபாவத்தில் மிகவும் எளிமையானவர் நெடிதுயர்ந்த கனிவான தோற்றங் கொண்ட தோழர் பத்மநாபாவின் கண்களில் உறுதியும் கனிவும் கலந்தே இருக்கும். அவர் அதிர்ந்து பேசியது கிடையாது. மிக மெதுவாக ஆனால் ஆழ்ந்து சிந்திக்க வைப்பவையாக மிகச் சுருக்கமாக அவர் பேசுவார். பல நூற்றுக் கணக்கான தோழர்களின் நட்பு சக்திகளின ஈழ மக்களின் மலையக மக்களின் இதயங்களை அவர் கவர்ந்திருந்தார். அவருடன் பழகிய எவரும் இந்த வார்த்தைகளையே பிரயோகிப்பார்கள். ''நாபா ஒரு நல்ல மனுசன்'' இவ்வாறு தான் கட்சித் தோழர்கள் தவிர்ந்த மாற்று இயக்கங்கள் அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்களும், மக்களும். சர்வதேச நண்பர்களும் கூறிக் கொண்டார்கள்.

ஓய்வாக இருத்தல் என்பது அரிதினும் அரிது. எந்தப் பிரச்சினை வந்தாலும் மனம் கலங்காமல் ''நோ புறப்பிளம்'' என்று சொல்லிக் கொண்டு வேலை செய்தவர் அவர். எத்தகைய நெருக்கடியின் போதும் அவர் துவண்டு விடவில்லை.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை ஏற்று வடகிழக்கு மாகாண அரசை உருவாக்குவதில் முழுமையாக பங்களிப்பை வழங்கிய தோழர் பத்மநாபா அவர்கள்தான் மாகாண அரசின் ஓர் அங்கத்தவராகவில்லை. அவர் தமிழ் மக்களது விடுதலையின் தொடர்பாகத் தொலைநோக்குடனான குறிக்கோள்களையும்கொண்டிருந்தார்.

ஆனால் போராடுபவர்கள் தமக்குரிய சூழலை ஜனநாயகமாக வைத்திருக்க வேண்டும் என்று அவர் எப்போதும் அவாவுற்றார். அவர் தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தில தோன்றிய ஜனநாயக விரோத போக்குகளை மாத்திரம் கண்டிக்கவில்லை. சிங்கள மக்கள் மத்தியில் ஜே. வி. பி. கிளர்ச்சிக் காலத்தில் அரசினாலும் கிளர்ச்சி வாதிகளாலும் தெற்கில் உருவாகிய ஜனநாயக விரோத போக்குகளுக்கு எதிராகவும் குரல் கொடுத்தார்.

## மனம் தளரவில்லை

இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் உருவாகிய மாகாண அரசாங்கத்தின் செயற்பாடுகள் பிரேமதாச அரசினால் சீர்குலைக்கப்பட்டு செயற்பட முடியாத நிலை உருவாகிய பின்னர் கூட அவர் மனம் தளர்ந்து விடவில்லை. இந்தியாவுக்கு இடம்பெயர்ந்து சென்ற தோழர்களின் பராமரிப்பு. குடும்பங்களின் பிரச்சினைகள், சிதறுண்ட நிலைவரங்களுக்கு மத்தியில் கட்சியின் இரண்டாவது காங்கிரசை கூட்டுவதற்கான முயற்சியில் ஈடுபட்டிருந்தார். எமது கட்சியின் முன்னேற்றங்கள், பின்னடைவுகள், சரி பிழைகள் பற்றிய சுய விமர்சனம் நடத்தப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினர்.

அவர் சென்னை கோடம்பாக்கத்தில் 12 தோழர்களுடன் படுகொலைசெய்யப்பட்டபோது, தமிழகம் அதிர்ச்சியில் உறைந்து போயிற்று. தமிழக மக்கள் ஈழப்போராட்டத்தின் மீது வைத்திருந்த நம்பிக்கைகள் தவிடு பொடியாவதற்குமுதல் கால்கோள் இட்டது இந்தப் படுகொலையே.

அவர் எந்தளவு தூரம் அங்கு வேலை செய்தார், எந்தத்தகைய மானிட சக்தி அவரிடம் இருந்தது என்பதற்கு அவருடைய இறுதி அஞ்சலியில் கலந்துகொண்ட இலட்சம் மக்களும் தலைவர்களும், அறிஞர்களும் சான்று. ஒரு விசாலமான எண்ணம் கொண்ட தன்னை முழுமையாக அர்ப்பணித்த அவருடைய இழப்பு ஈழத் தமிழருக்கு ஒரு தலைமைத்துவ வெற்றிடமே.

---

# பரிசுத்த ஆவிக்கு செபம்

எனக்கு ஒளியாயிருந்து, உன்னத நிலையை நான் அடைய வழிகாட்டும் பரிசுத்த ஆவியே! உமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக, உமது அருட்கொடைகளின் மூலம் என்னுள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்கு தீங்கு செய்தோரை நான் மன்னிக்க அருள் புரிபவரே! என் வாழ்வின் எச்சந்தர்ப்பத்திலும்எனக்கு உற்ற துணையான உமக்கு, இச் சிறிய செபத்தின் மூலம் நீர் செய்யும் சகலதிற்கும் நன்றி கூறுகிறேன். என் தேவைகள் எவ்வளவு முக்கியமாக இருப்பினும், எக்காரணம் கொண்டும் உம்மிலிருந்து விலகாமல் என்றும் உம்மில் நிலைத்திருப்பேனென உறுதி கூறுகிறேன். நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவில்லா மகிமையில் பங்குபெற வேண்டுகின்றேன்.

உங்கள் தேவை எவ்வளவு கடினமாக இருப்பினும் அடுத்தடுத்து 3 நாள்களுக்கு இச் செபத்தை உங்கள் தேவையைக் கேளாமல், சொல்லிவரின் உங்கள் தேவை நிறைவேறும். இச் செபத்தைப் பிரசுரிப்பதாக வாக்குப் பண்ணவும்.

ஓ பரிசுத்த ஆவியே! உமக்கு நன்றி.

J. L. C.

(56959)

---

# இலவச கண் மற்றும் மருத்துவ சிகிச்சைமுகாம்

எதிர்வரும் 21-06-98 ஞாயிற்றுக்கிழமை பச்சிலைப்பள்ளி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கேட்போர் கூடத்தில் கண்பரிசோதனை நீரிழிவுப் பரிசோதனை, இரத்தப்பரிசோதனை போன்ற மருத்துவப் பரிசோதனைகள் இலவசமாக காலை 9-30 மணியிலிருந்து நடைபெறவுள்ளது. மூக்குக் கண்ணாடிகளும் வழங்கப்படும். பரிசோதனை செய்ய விரும்பும் அனைவரையும் சமுகந்தருமாறு வேண்டுகின்றோம்.

தலைவர்
யாழ். லயன்ஸ் கழகம்

(சி/4058)

---

# கண்ணீர் அஞ்சலி

எமது கிராமத்தின் அறப்பணியாளரும்,
சமூகத் தொண்டருமான.

## சுப்பிரமணியம் குமாரசாமி

அவர்கள் கனடாவில் காலமான செய்தி கேட்டு ஊரதீவுக் கிராம மக்கள் ஆழ்ந்த அனுதாபத்தையும், கண்ணீர் அஞ்சலியையும் அவருக்கு காணிக்கையாக்குகின்றனர்.

ஊரதீவு வாழ் மக்கள்,
ஊரதீவு சனசமூக நிலையம்,
ஊரதீவு கிராம அபிவிருத்திச் சங்கம்
புங்குடுதீவு இளந்தமிழர் மன்றம்.

(56963)

---

# உறுதியான...

(ஏழாம் பக்கத் தொடர்)

தொண்டு புரிதல் வேண்டும். இன்றைய இளைஞரின் தலையாய கடனாக இது உள்ளது. இது தமது கடமையும் உரிமையும் என்ற உணர்வோடு இன்றைய இளைஞர் செயலில் இறங்க வேண்டும். எங்கள் சமயத்தின் எதிர்காலமும் அவர்கள் கையிலே தான் உள்ளது. ஏனைய மதங்களைச் சார்ந்தவர்கள் தமது வழிபாட்டு இடங்களில் எவ்வளவு ஒழுங்காக நடந்து கொள்கிறார்கள் என்பதை அறிந்திருந்தும் எமது கோயில்களில் மட்டும் நம்மவர்கள் ஒழுங்கீனங்களை ஏன் ஏற்படுத்த வேண்டும். பூசை நேரங்களில் வேண்டாத விஷயங்களைப் பற்றிப் பேசுவது; கோயிலுக்கு வருவோர் போவோர் பற்றி கேலி பேசுவது; அரட்டையடிப்பது; சிறுவர்சிறுமிகளையும் இக் கேலிப் பேச்சில் ஈடுபடுத்துவது என்பன சமய நடைமுறைகளுக்கு ஒவ்வாதவையாகும். இச் செய்கைகள் வழிபாட்டுக்கு வரும் உண்மையான தெய்வ ஈடுபாடுள்ளோரையும் திசை திருப்பும் செயலாகும். இவற்றினால் எமது சமய அடிப்படைகளே விளக்கம் பெறாமல் போய் விடுகிறது. இதற்குச் சில அர்ச்சகப் பெருமக்களும் அவர்களில் உள்ள இளஞ் சமுதாயத்தினரும் துணை போவதும் உண்டு. இதனால் பலருக்கு இடையூறும் குழப்பமும் ஏற்பட ஏதுவுண்டு. இதுகுறித்து அவர்கள் சிந்திப்பதில்லை. நம்மவருடைய குறிக்கோள் இன்பமே சூழ்க எல்லோரும்வாழ்க என்பதே. இதைநாம் மறந்து விடுகிறோமல்லவா? ஆண்டவன் சந்நிதானத்தில் தீபாராதனை நடைபெறும் போது பலர் தாம் மட்டும் பார்த்து வழிபட்டால் போதுமென்ற உணர்வுடன் தமக்குப் பின்னால் நிற்கும் ஏனையோர் வழிபட முடியாமல் இடையூறு செய்வதையும்பார்க்கிறோம். இவையெல்லாம் சிந்தித்துத் தெளிந்து தவிர்க்கப்பட வேண்டியவை. சிறு சிறு விஷயங்களானாலும் நமது சமயக் கோட்பாடுகளை அரிக்கும் கறையான்கள் [illegible] என்பதை உணர வேண்டும்.

நன்றி: 'ஞானச்சுடர்' சித்திரை மாத சந்நிதியான் ஆச்சிரமம்

---

# ஆறாம் மாத நினைவலைகள்



அமரர்

## மாணிக்கராசாகேதீஸ்வரன்

(முகுந்தன்)

தோற்றம்: 17 — 06 — 1969

மறைவு: 23 — 01 — 1998

இனியவனே !

உந்தன் புன்சிரிப்பினால்
எமை எல்லாம் கவர்ந்தாய்
எம் வாழ்வு கனவாகி கரைந்ததாலே
நாம் இங்கு தவிக்கிறோம்
இன்று நீ இல்லை அருகினில்
உன் மழலை முகம் காணவும் வாராயோ?

பிரிவால் துயருறும்
மனைவி, மகள்,
மாமா, மாமி, மைத்துனர்,
சகோதரர், உறவினர்.

நெடுந்தீவு — 10

(56971)

---

# கண்ணீர் அஞ்சலி

இலங்கை மின்சார சபை பிரதிப் பொதுமுகாமையாளர் (வடக்கு) அலுவலக கட்டட உரிமையாளர்

## நாகலிங்கம் சண்முகம்

அவர்கள் 1998. 06. 17 அன்று கொழும்பில் காலமானதையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கு கொள்வதுடன் அவரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

பிரதிப் பொது முகாமையாளர்.
[வடமாகாண அலுவலகம்]

பி. பொ. (வ) அலுவலகம்,
இ. மி. ச.,
536/01, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/4053)

---

# இரண்டாவது ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
17 — 03 — 1923

மறைவு
09 — 07 — 1996

பண்டிதர், வித்துவான், சைவப்புலவர்

## அமரர் இ. திருநாவுக்கரசு

திருமதி கண்ணகைப்பிள்ளை
திருநாவுக்கரசுவும்,
குடும்பத்தினரும்.

''பத்மாவாசம்''
காங்கேசன்துறை வீதி,
இணுவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிதாக யாழ். நகரில்!

## ஸ்ரீ முத்துமாரி அம்மன் ரேடர்ஸ்

சகலவிதமான பலசரக்கு வகைகளும், சிமெந்தும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

✶ 19-06-98 இல் இருந்து 30-06-98 வரை மோட்டார் சைக்கிள்களுக்கு விசேட கழிவு உண்டு.

HONDA MD- 90, HONDA MD- 50
„ CD- 50, „ CD- 90
SUPER CUP LANCER- 50
CHALLY- 50
YAMAHA - 50 YAMAHA- 90

இரும்புப்பெட்டி விற்பனைக்கு வைத்திருப்போர் உடன் தொடர்புகொள்ளவும்.

தொடர்பு: இல. 171, KKS வீதி,
யாழ்ப்பாணம்.
(56941)



யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி

## பழைய மாணவர் சங்கப் பொதுக்கூட்டம்

மேற்படி கூட்டம் 21-06-98 ஞாயிற்றுக்கிழமை காலை 9. 30 மணியளவில் கல்லூரி அதிபர் தலைமையில் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

1976 ஆம் ஆண்டிலிருந்து கற்ற எமது மாணவிகள் அனைவரையும் இக்கூட்டத்தில் தவறாது பங்குபற்றுமாறு கேட்கின்றோம்.

தலைவர். செயலாளர்.

(சி/4056)



## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்

யாழ். கிளை தலைமையகம்

## வதிரி தோற் பொருள் உற்பத்தித் திட்டம்

மேற்படி திட்டம் தொடர்பாக, பயிற்சியாளர், பயிற்சி பெறுநர், காவலாளிகள் ஆகியோரை தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை 20-6-1998 இல் (முற்பகல் 10.00 மணிக்கு) தேவரையாளி இந்துக் கல்லூரி, கரவெட்டியில் நடைபெறும் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றவுள்ளோர் மேற்குறிப்பிட்ட கல்லூரிக்கு வருகைதரும்படி அழைக்கப்படுகிறார்கள்.

கௌரவ செயலாளர்,
இ செ. ச. யாழ். கிளை.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
(சி/4052)



## INSTITUTE OF INFORMATICS STUDIES

வலிகாமம் மேற்கு
மாணவ, மாணவியர்களுக்கு!

### கணனி வகுப்புகள்

உங்களின் வசதி கருதி
எமது கிளை நிறுவனம் ஒன்று
"சேக்கிள் சென்ரர்"
சங்கானையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
ஆரம்பம்: 20-06-1998 முற்பகல் 10 மணி.

= Director

(சி/4020)


## ஆசிரியருக்கான நேர்முகப் பரீட்சை ஒத்திவைப்பு

கொழும்பு, ஜூன் 19

ஆசிரியர் சேவை வகுப்பு ஒன்றுக்கு பதவி உயர்த்துவதற்கான நேர்முகப்பரீட்சை அடுத்த மாதம் 14 ஆம் திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளதாக தமிழர் ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்த நேர்முகப் பரீட்சை இன்று கொழும்பில் ஆரம்பமாகும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளோர் விவரம் வருமாறு:-

எஸ் சுவாமிநாதன் (கோப்பாய் கோட்ட அலுவலகம், கே. தேவேந்திரன் (வைத்தீஸ்வரா), ஆர். நாகராசா பெரியபுலம் ம.வி.), சி.ராஜரத்தினம்) திருக்குடும்பகன்னியர்மடம்), கே. அருந்தவபாலன் (றிபேர்க்), எஸ்.கனகரத்தினம் (கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி), ஏ. சற்குணசிங்கம் (விக்ரோரியா), ஏ, சற்குணசிங்கம் (வேலாயுதம் ம. வி.), கே, சட்டநாதன் (கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி), எல். பி. ஞானப்பிரகாசம் (ஹாட்லி), எம். இளங்கோ (கரவெட்டி விக்கினேஸ்வா). வி. லக்ஸ்மன் (ஸ்கந்தா), ஜே. ஜே. அற்புதராசா (யாழ்சென்ரல்)


## தேவை

எமது வாடிக்கையான நிறுவனம் ஒன்றிற்கு உள்வாரியாக அமைந்திருக்கும் உணவகத்திற்கு உணவு வகை பற்றி அறிவுடைய ஒரு பெண் முகாமையாளர் தேவை.

உடன் தொடர்பு கொள்க.

இல-140, பலாலி வீதி
திருநெல்வேலி.
(பரமேஸ்வராச் சந்தி)

(சி/4062)



மீண்டும்...

## C. C. A.

வெலிங்டன் சந்திக்கு அருகில்
யாழ்ப்பாணம்.

### A/L 2000

கலை, வர்த்தக வகுப்புகள்

ஆரம்பம்: 20-06-98

பிரபல ஆசிரியர் குழு

Eco. = திரு சண்
Acc. = திரு நித்தி
Com. = திரு.முரளி
Sta. = திரு. திரிகரன்
Log. = திரு சயந்தன்
Tam. = திரு. தங்கராஜா
Hindu = திரு. கண்ணன்
Chri. = திரு. ரங்கன்
Pol = திரு. பஞ்சு
Geo - திரு. ராஜமனோகரன்

பிரத்தியேக வகுப்புகளும் ஆரம்பமாகவுள்ளன.

(56970)


## ஆனைக்கோட்டை...

(முதலாம் பக்கத் தொடர்) இதில் கொல்லப்பட்ட விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவரது சடலத்தையும், அவரது ரி-56 ரக ஆயுதத்தையும் படையினர் கைப்பற்றியதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ-7)


## ஒரு காட்சி மட்டும் பிற்பகல் 3-00மணி

செ. மெற்றாஸ் மயிலின்

## வேழம்படுத்த வீராங்கனை

(ஆட்ட நாட்டுக் கூத்து)

இடம்: இராமநாதன் கல்லூரி மண்டபம்
மருதனார் மடம்

காலம்: 21-06-1998 ஞாயிற்றுக்கிழமை
பிற்பகல் 3-00 மணி (புதிய நேரம்)

நுழை வாயிலில் சீட்டுக்கள் பெற்றுக்கொள்ளலாம்.

மாணவர்களுக்கு; 20/- பெரியவர்களுக்கு: 50/-

பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக்கழகம்

(56975)



## சர்வதேச லயன்ஸ் கழகம்

மாவட்டம் 306 பி ஸ்ரீலங்கா

ஜூன் 27 ஆம் திகதி
லியோக்களின் எழுச்சி விழாவாகக்
கொண்டாடப்படவுள்ள

## லியோ கருத்தரங்கு

நிகழ்வையொட்டி
மாவட்ட லியோ தலைவரால்
நடத்தப்படும்
ஆண்களுக்கான
லியோ கழக உறுப்பினர்கள்,
லியோ கழகங்கள் இயங்கும்
பாடசாலை மாணவர்கள் பங்கு கொள்ளும்
ஆண்கள் ஒற்றையர்

## பட்மின்ரன் போட்டி

யாழ். நகரில் பல்துறை வாணிபத்தில்
முன்னணி வகிக்கும்
மகாலட்சுமி ஸ்தாபனத்தாரின்
அனுசரணையுடன் நடத்தப்படும் இப்போட்டியில்
வெற்றிக் கிண்ணம் சான்றிதழ்களுடன்
பரிசாக வழங்கப்படவுள்ளது.

போட்டி விதிகள்

1. ஆண் லியோ கழக உறுப்பினர்களும், லியோ கழகங்கள் இயங்கும் ஆண்கள் பாடசாலை மாணவர்களும் பங்கு பற்றலாம்.
2. அணி ஒழுங்குத் தேர்வு 20 – 06 – 1998 பிற்பகல் 4.00 மணிக்கு 82/5, நல்லூர் குறுக்கு வீதியில் அமைந்துள்ள மாவட்ட லியோ தலைவர் இல்லத்தில் நடைபெறும்.
3. போட்டிகள் நடைபெறும் இடம், நேரம் 20-06-98 இல் அணி ஒழுங்கு தேர்வின் போது அறிவிக்கப்படும்.
4. விண்ணப்பங்கள் யாவும் 20 – 06 – 1998 பிற்பகல் 3.00 (பழைய நேரம்) மணிக்கு முன்.

தலைவர்
மானிப்பாய் பரிஷ் லியோ வட்டம்
மே/பா. மாட்ட லியோ தலைவர்
இல. 82/5, நல்லூர் குறுக்கு வீதி, நல்லூர்.
என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்

போட்டி ஒழுங்கமைப்பு
மானிப்பாய் பரிஷ் லியோ கழகம்

லயன் பா. தவபாலன்
மாவட்ட லியோ தலைவர்
சர்வதேச லயன்ஸ் கழகம்
மாவட்டம் 306 பி, ஸ்ரீ லங்கா.

விளம்பர அன்பளிப்பு

மொனறா விமான சேவை நிறுவனத்தின்
யாழ்ப்பாண முகவர்களும்
பல்துறை வாணிபத்தின் மக்களின் நம்பிக்கையை
பெற்ற நட்சத்திர ஸ்தாபனம்.

## மகாலட்சுமி ஸ்ரோர்ஸ்

212, ஸ்ரான்லி, வீதி,
யாழ்ப்பாணம்.
தொ. பேசி: 2024, 2025

379, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு.
தொ. பேசி: 074-512132

162, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 2813

(சி/4060)



'கசிர்பினை இனியும் வடித்திடாதீர் மக்கள் துடித்துமே சாக செய்திடாதீர்'
'துன்பம் துயரம் தந்து குடும்பத்தை அழித்திடும் கசிப்பை தூரத்தே விரட்டிடுவோம்'

(சி/4054)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார்வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19-6-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.